REGISTERED No. M. 6165. அணு. 2

399

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

399
3-54

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUL 1954
MADRAS

மாத பத்திரிகை

ஆகஸ்டு 1954

விஷயம்		பக்கம்.
சதுல் அல்ஹா ஒரு தியாகப் பெருநாள்	...	1
திருக் குர் ஆன் சாரசங்கிரஹம்	(ரஹ்மத் பாகவி)	5
இரத்தச் சின்னம்	(தொடர் கதை)	9
கல்வியின் மகாத்மியம் (எம். எஸ். காஜா முஈனுத்தீன், தென்காசி)		17
ஹஜ்ஜு மாதக் கடமைகள் யாவை (ரஹ்மத்துல்லா—ஆலிம்)	... ...	21
ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா சரித்திரச் சுருக்கம் (...ய்யம் பேட்டை S. அப்துல் ரஜாக் சாஹிப்)		26

... இஸ்லாம் ஆபீஸ்:
... 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

JL
Q7ஹ211, N24 FI
N54
187033

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்:	இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு		
	வருஷ சந்தா	ரூ.	1–8–0
	தனிப் பிரதி	அணா.	0–2–0
	மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா	ரூ.	2–0–0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

பத்ஹுல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

மாயமாய் மறைந்த மங்கை.

இது ஓர் அருமையான துப்பறியும் நாவல்; திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்துள்ளது. இதில் ஒரு பெரிய பணக்காரன் விரோதிகளுக்குப் பயந்து தனக்கு ஆபத்து ஏதும் வராமலிருக்க பெயர் பெற்ற துப்பறியும் ஷம்ஸின் உதவியை நாட, ஷம்ஸ் ஷி வேலையிநிமித்தம் அனுப்பிய ஏஜென்ட் கொலையுண்டு, அந்த பணக்காரரும் காணாமற் போய் விடுகிறார். இதை ஷம்ஸ் விசாரிக்க செல்ல, அங்கு ஒரு மாசற்ற மங்கை மாயமாய் மறைந்த மர்மத்தையும், ஷம்ஸ் தனது அஸிஸ்டென்ட் சோடேவின் உதவியினால் சிறிதும் அஞ்சாமல் கொலைக் கூட்டத்தினடுவே துணிந்து சென்று மர்மங்களைக் கண்டு பிடித்து விளக்குகின்றார். இதைப்படிக்க ஆரம்பஞ் செய்வோர் கதை முழுவதையும் முடிக்காமல் புத்தகத்தை கீழ் வைக்கமாட்டார் என்பதிற் ஐயமில்லை. இதன் விலை அணா 8

தேவையுள்ளோர் 10 அணா ஸ்டாம்பு அனுப்பி வைத்தால் புக்போஸ்ட் மூலம் அனுப்பப்படும்.

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

الإسلام

பத்ஹுல் இஸ்லாம்.

ஆகஸ்டு—1954.

ஈதுல் அல்ஹா.

ஒரு தியாகப் பெருநாள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUL 1954
MADRAS

இஸ்லாத்தின் இருபெரும் புனிதப் பண்டிகை நாட்களில், ஈதுல் அல்ஹா என்பது அரிய கருத்தும் விசேஷத் தத்துவமும் உடையதாகும். இப்புனிதப் பெருநாளை நாம் "குர்பானி ஈது" என்று சொல்கிறோம். "குர்பானி" என்ற பதத்துக்கு "தியாகம்" என்ற பொருளே பொருத்த முடையதாகும்.

தியாகம் என்பது மகத்தான தத்துவார்த்த முடையதாகும். தியாகம் தான் தூய்மையின் சின்னம். தியாகம் தான் பரிசுத்தத்தின் அடையாளம். தியாகம் தான் உயர் குணத்தின் உன்னத நிலை. தியாகம் தான் நம்முடைய அன்பு விசுவாசத்தையும் பக்திப் பிரபாவத்தையும் தெரிவித்துக் கொள்வதற் கொரு நற்சாதனமாகும்.

குர்பானி என்ற அரபிப் பதத்துக்கு தமிழில் சரியான பதம் கிடையாது. ஆனால் தியாகம் என்ற பதத்தைக் கொண்டு அதன் உட்கருத்தை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். குர்பானி என்பதற்கு சிலர் 'பலி' என்ற பதத்தை பொருளாகக் கொள்கின்றனர். 'பலி' என்பது குர்பானியைப் போல் அத்துணை அர்த்த புஷ்டியுள்ள பதமாக மாட்டாது. பலி என்பது கொலைக் கொப்பான ஒரு தீய காரியத்துக்கும் சொல்லப்படும். எனவே, குர்பானி என்ற நல்ல பதமே சாலச் சிறந்ததாகும்.

குர்பானி பற்றி இஸ்லாம் கட்டளை.

நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் “நம்பிக்கை யுடையவர்களே, உங்களி லொருவர், (பொருளாதார) வசதி யுடையவரா யிருந்தும், குர்பானி புரியவில்லை யாயின், அவர் எங்களுடைய அணிவகுப்புக்களில் வந்து சேர்ந்து கொள்ள வேண்டாம்” என்று திருவுளமா யிருக்கிறார்கள்.

அதாவது, சாதாரணமாக உண்டு கொண்டும் உடுத்துக் கொண்டும் சுகம் அனுபவித்துக் கொண்டு மிருக்கும் ஒரு தனவந்தர், தன் கடமையில் முக்கியமான தொன்றான குர்பானியும் செய்ய வேண்டும். அங்ஙனம் வசதியுடையவரா யிருந்தும் அவர், அக்கடமையை நிறைவேற்ற வில்லையானால், அவர் முஸ்லிம்களாகிய எங்களைச் சேர்ந்திருக்க வேண்டியதில்லை என்பதே நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் போதனை.

ஒரு முறை நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் திருச் சமுகத்திற்கு ஒரு புதிய சஹாபி (தோழர்) வந்து “யாரஸூலல்லாஹ்! குர்பானி என்றால் என்ன?” வென்று கேள்வி கேட்டார். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள் “அது உங்கள் பூர்வ தந்தையான இப்ராஹீம் நபி (அலை) அவர்களுடைய ஸுன்னத் என்னும் வழிப்பாடு ஆகும்” என்று பதில் சொன்னார்கள். மீண்டும் அந்தத் தோழர் “யா ரஸூலல்லாஹ்! நாம் இதை அநுஷ்டிப்பதில் நமக்கென்ன பெருமை யிருக்கிறது?” என்று கேட்டார். அதற்கு நபி பெருமானார் (ஸல்) அவர்கள் “தோழரே, அதன் பிரயோஜனம் அளவற்றதாகும். நாம் குர்பானி கொடுக்கிற ஒரு ஜீவப் பிராணியின் சரீரத்தில் எத்தனை ரோமங்கள் இருக்குமோ அத்தனை நன்மைகள், குர்பானி கொடுக்கும் புண்ணிய சீலரின் பங்கில் எழுதப்படுகின்றன” என்று திருவுளம் பற்றினார்கள். (இப்னு மாஜா)

இவ்வாறே, நாம் குர்பானி கொடுக்கிற உயிர் பிராணியின் இரத்தம், சதை, தோல், கொம்பு, எலும்பு எல்லாவற்றிற்குமாக நமக்கு தவாபு என்னும் புண்ணியங்கள் அபரிமிதமாகக் கிடைக்கின்றன வென்று ஹஜ்ரத் அலி (ரலி), ஹஜ்ரத் பாத்திமா நாயகி (ரலி), ஹஜ்ரத் ஆயிஷா நாயகி (ரலி) ஆகியோர் அறிவித்துள்ள ஹதீதுகள் வாயிலாகவும் குர்பானியின் புண்ணியமும் பெருமையும் மகிமையும் எடுத்துரைக்கப் பட்டிருக்கிறன.

‘ஈதுல் அல்ஹா’ என்னும் தியாகப் பெருநாளின் போது, தொழுகைக்கு அடுத்தபடியாக முஸ்லிம்கள் புரிய வேண்டிய மிகப் பெரும் கைங்கரியம் குர்பானியே யாகும். அது ஒரு பெரிய வணக்க வழிப்பாடும் ஆகும். பரோபகாரமான புண்ணிய நற்செயலும் ஆகும். தொழுது கொள்வதால், தன் ஆத்மாவுக்கு மட்டும் பிரயோஜனம்

187033

உண்டாகிறது. ஆனால், குர்பானி கொடுப்பதால், குடும்பத்தாரும் உற்றார் உறவினரும் ஏழை எளியோரும் அதன் மாமிசம் உண்டு ஆத்மத் திருப்தி யடைகிறார்கள். இது பரோபகார்த்தமா யிருப்பதோடு, இஸ்லாமிய வணக்கமாகவும் ஆகிறது.

இஸ்லாமிய குர்பானி மகிமை.

பரிசுத்த தீனுல் இஸ்லாத்தில், தூய குர்பானியின் இலக்ஷணம் எடுத்தோதப்பட்டிருக்கிறது. திருக்குர்ஆனில் காணப்படும் ஒரு அரிய வாக்கியமே இதற்கு சான்று:-

“நீங்கள் குர்பானி (பலி) கொடுக்கிற உயிர்ப் பிராணியின் மாமிசமோ, இரத்தமோ அல்லாஹ்வுக்குப் போய்ச் சேருவதில்லை. ஆனால் அவ்வாண்டவனால் ஏற்கப்படுவது உங்கள் ஹிருதயங்களில் மிளிரும் தக்வா என்னும் பக்திப் பரவசமே யாகும்.”

ஒரு முஸ்லிம் ஆட்டையோ மாட்டையோ குர்பானி கொடுக்கும் போது “இந்தக் கைங்கரியத்தை நான், எல்லாம் வல்ல இறைவனுக்காவே செய்கிறேன். நான் பரிசுத்தம் அடைவதற்கும் என் வணக்க வழிபாட்டை இறைவன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவுமே, அக்கட்டளைப்படி இக்காரியம் செய்கிறேன்” என்று மனப்பூர்வமாய் நினைக்கிறான். இதுதான் நிய்யத்து. ஒவ்வொருவர்க்கும் அவரவர் நிய்யத்தின் பிரகாரமே நன்மைகள் கிடைக்கின்றன.

முஸ்லிமானவன் எந்தக் காரியத்தையும் சர்வஜீவ தயாபரனாகிய அல்லாஹ்வுக்காகவே செய்யவேண்டும்; மனித ஜீவியமும் மரணமும், வாழ்வும் தாழ்வும், வணக்கமும் எல்லாமுமே அவ்வாண்டவனுக்காகவே யிருக்கவேண்டும் என்பதே இஸ்லாத்தின் போதனையாகும். இதுவே குர்பானியின் மகிமையும் தத்துவமும் ஆகும்.

இஸ்லாமிய சம்பிரதாயத்தில், ஈதுல் அல்ஹா பெருநாளின்போது ஆட்டை குர்பானி கொடுக்கவேண்டுமென்பது, ஹஜ்ரத் இப்ராஹீம் நபி (அலை) அவர்களின் அனுஷ்டானம் என்னும் சுன்னத்தை பின்பற்றி செய்யப்படும் ஒரு கர்ண பரம்பரையான நற்கருமமாகும். ஹஜ்ரத் இப்ராஹீம் நபியின் உள்ளத்தை இறைவன் சோதிக்க விரும்பினான். எனவே, அவரது விருத்தாப்பியத்தில் பிறந்த ஒரே அருங்குமாரனாகிய ஹஜ்ரத் இஸ்மாயீல் நபி (அலை) அவர்களை, சிறுபோதில், எல்லாம் வல்ல இறைவன் தன்பெயரால் பலியிட்டுக் குர்பானி செய்து விடும்படி கட்டளையிட்டான். இப்ராஹீம் நபி, ஆண்டவனின் கட்டளையை சிரமேற்றாங்கி, பிள்ளை இஸ்மாயீலை தரையில் கிடத்தி, கத்தியை கழுத்தில் தீட்டி அறுக்கத் துணிந்தார்கள். ஆண்டவன் அந்நபியின் உள்ளத் தூய்மையையும் தியாகப் பண்பையும் தெரிந்து

கொண்டு, அவ்வருமைப் புதல்வனுக்குப் பதிலாக, ஒரு ஆட்டுக்கிடாவை அறுத்து குர்பானி செய்யும்படி அருள் புரிந்தான். அதன்படியே முதல் குர்பானி நிறைவேற்றப்பட்டது.

இந்த ஆதி குர்பானியை அனுசரித்துத்தான் இன்று உலகமெல்லாம் முஸ்லிம்கள் தங்கள் உள்ளத்தூய்மையாகிய தெய்வபக்தியை வெளிப்படுத்துவதற்காக, இஸ்லாத்தின் ஆக்ஞைக்கு கட்டுப்பட்டு, ஈதுல் அல்ஹாவின் போது குர்பானி செய்துவருகிறார்கள். எனவே, ஈதுல் அல்ஹா ஓர் அரும்பெரும் தியாகப பெருநாளாகும்.

"அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்."

தமிழில் இதுகாறும் வெளிவராத

முஸ்லிம் அத்வைத மூலமொழி

இது அரபி, பார்ஸி பாஷைகளிலிருந்து நெல்லிக்குப்பம் மௌல்வி முஹம்மது அப்துல் றஹ்மான் ஸாஹிபவர்களை தமிழில் உரை படுத்தப் பட்ட அருமையான இஸ்லாமிய அத்துவைத நூல்.

இதில் இஸ்லாமிய மூல மந்திரமாகிய "லாயிலாஹ இல்லல்லாஹு" என்னும் கலிமாவின் பொருளை, உள்ளது உள்ளபடி விளக்கிக்காட்டி அல்லாஹு தஆலா சர்வமும் தானாயிருக்கிறான் என்ற சத்தியத்தை நிலைகாட்டி, அதற்கு ஆதாரமாக ஆயத்துகளும் ஹதீதுகளுமாகிய சுருதிப் பிரமாணங்களையும் எடுத்துத் தீட்டியிருக்கிறார். அத்துவைதமே தெரியாத சாமானிய படிப்பாளிகள்கூட இதை வாசிக்கத் தொடங்கினால் இதன் உண்மைதா னென்னவென்று தெரிந்துகொள்வர்.

இந்நூலுடன் "துஹ்பத்துல் முர்ஸலா" என்கிற ஓர் அரிய அத்வைத நூலும் "இந்துமத வேதாந்தப் பகுதி" என்ற ஓர் நூலும் ஆக மூன்றும் சேர்த்து ஒரே பைண்டு செய்யப் பட்டிருக்கிறது. விலை ரூ. 1—12—0

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

3-வது பகுதி :

திருக் குர்ஆன் :: :: :: :: சாரசங்கிரஹம்.

அல்லாஹ்வைப் பற்றிய ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

இறைவனை அஞ்சுவோர்க்கு சுவர்க்கபோகம் உண்டு.

மேலும் எவர், (தன் அனுஷ்டானங்களுக்கு சமாதானஞ் சொல்லுங்காலத்தை எண்ணி) இறைவன் முன் நிறுத்தப்படுவதைபற்றிப் பயப்படுகின்றாரோ, அவருக்கு (சுவர்க்கத்தில்) இரண்டு உத்தியான வனங்கள் உண்டு. எனவே, (மாந்தரே, ஜின்களே) நீங்கள் இருசாராரும் உங்கள் இறைவனின் எந்தெந்த அருட்பாக்கியங்களைத்தான் (பொய்யென) மறுக்கப்போகிறீர்கள்? அந்த இரு உத்தியான வன (விருக்ஷ)ங்களில் அநேக கிளைகள் இருக்கும். மேலும் நீங்கள் இருசாராரும் உங்கள் இரக்ஷகனின் எந்தெந்த அருட்பாக்கியங்களைத்தான் மறுக்கப்போகிறீர்கள்? அந்த இருதோட்டங்களிலே, இரண்டு நதிகள் ஓலித்தோடிக் கொண்டிருக்கும். மேலும் நீங்கள் இருசாராரும் உங்கள் இரக்ஷகனின் எந்தெந்த அருட்பாக்கியங்களைத்தான் மறுக்கப் போகிறீர்கள்? அவ்விரு வனங்களில், ஒவ்வொரு விதமான கனிவர்க்கங்களில் இரண்டு இரண்டு வகைகள் இருக்கும். மேலும் நீங்கள் இருசாராரும் உங்கள் இறைவனின் எந்தெந்த அருட்பாக்கியங்களைத்தான் மறுக்கப்போகிறீர்கள்? அங்கு சுவர்க்க வாசிகள் திண்டுகளில் சாய்ந்து கொண்டிருப்பார்கள். அத்திண்டுகளின் வரம்பு பட்டுப் பீதாம்பரங்களிலானதா யிருக்கும். அவ்வன விருக்ஷங்களின் கனிக்கிளைகள் (அப்படியே வாயால் கவ்வித் தின்ன) கீழே தாழ்ந்தவண்ணம் இருக்கும். மேலும் நீங்கள் இருசாராரும் உங்கள் இறைவனின் எந்தெந்த அருட்பாக்கியங்களை மறுத்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? அந்த வனங்களிலே (நாணத்தால்) தாழ்ந்த பார்வையையுடைய தேவகன்னிகை (ஹூர்)களு மிருப்பார்கள். அன்னோர் மீது, (பிரஸ்தாப) சுவர்க்க வாசிகளைத் தவிர்த்து வேறெந்த மனிதருடையவும் ஜின்னுடையவும் ஸ்பரிசங்கூட பட்டிராது. மேலும் நீங்கள் உங்கள் இறைவனின் எந்தெந்த அருட்பாக்கியங்களை மறுக்கப்போகிறீர்கள்? அக்கன்னிகைகள் பவழம் போலும் முத்துக்கள் போலும் (தூய்மையாய் வனப்பாய்) இருப்பார்கள். மேலும் நீங்கள் உங்கள் இறைவனின் எந்தெந்த பாக்கியங்களை மறுக்கப்போகிறீர்கள்? (ஸூரா : அர்ரஹ்மான் ; ருகூ : 3)

ஆண்டவன் பெயரால் செலவு செய்யுங்கள்.

(சத்ஜனங்களே !) இறைவன் மீதும் அவனது திருத்தூதர் (முஹம்மது. ஸல்) மீதும் நன்னம்பிக்கை கொள்ளுங்கள். இறைவன் உங்களை சொந்தக் காரர்களாக்கினானே அந்த சொத்துக்களிலிருந்து (நற்காரியங்களுக்காக) செலவு செய்யுங்கள். எனவே, உங்களில் எவர், ஈமான் கொண்டிருக்கிறாரோ, எவர் (ஆண்டவன் பெயரால்) செலவுகள் செய்கிறாரோ அவருக்கு, மறுமை வாழ்வில் மகத்தான நற்பயன் உண்டு. (ஸூரா : ஹதீத் ; ருகூ : 1.)

இறைவனுக்கு நல்ல கடனாகக் கொடுங்கள்.

உங்களில் அல்லாஹ்வுக்கு அழகான (நற்) கடன் கொடுத்து வைப்பார் யார் உண்டு? (முன்வருவீர்களாக) அன்னோரின் அக்கடன் பொருளை ஆண்டவன் (பின்னர்) இரட்டிப்பாக்கித் தருவான். அதற் காக அன்னோருக்கு நல்ல பிரதிப் பிரயோஜனம் உண்டு. (ஸூரா : ஹதீத் ; ருகூ : 2.)

அல்லாஹ்வுக்காக உலகில் ஒதுங்கி வாழ்ந்த பெரியோர்.

மேலும் (இறைவனாகிய) நாம், நூஹையும் இப்ராஹீமையும் (நபிகளாக்கி) உலகிற்கு அனுப்பிவைத்தோம். அவர்களின் சந்ததி யிலே மற்றோர்க்கு நபித்துவம் அளித்து, (தெய்வ ஞானோதய வஹீ) வெளிப்பாடும் அருள் புரிந்தோம். அந்த மக்களில் சிலர், அந்த (நல்ல) மார்க்கத்தின்படி நடந்து கொண்டனர். அவர்களில் பெரும்பாலோர், வழி கெட்டுப்போனவர்களாயினர். அந்த ஜனங்களுக்கு பிறகு (வந்த சந்ததியிலு)ம், அவ்வழிப்படி நடக்கும் திருத்தூதர்களை அனுப்பி வைத்தோம். இவர்கட்குப் பிறகு மர்யமின் மகன் ஈஸாவை (திருத் தூதராக) அனுப்பி வைத்தோம். அவருக்கு இன்ஜீல் (பைபில்) வேத மும் அளித்தோம். எனவே, எவரெவர் அந்த ஈஸா (நபி)க்கு வழிப் பட்டு (நல்லவர்களாய்) நடந்துகொண்டார்களோ அவர்களுடைய உள்ளங்களில் நாம் பச்சாத்தாபத்தையும் இரக்கத்தையும் உண்டாக் கினோம். உலக (பாச)த்தை விட்டு ஒதுங்கி வாழும் முறையை (துற வறத்தை) அன்னோர் ஏற்றுக் கொண்டனர். அதை நாம் அவர்கள் மீது கடமையாக்கி வைக்கவே இல்லை. ஆயினும் அன்னோர், அந்த (ஒதுங்கி வாழும்) முறைமையை, இறைவனுடைய சந்தோஷத்தைப் பெறுவதற்கான சாதனமாய் (வழியாய்) சுயமே ஏற்படுத்திக்கொண்டு விட்டனர். அப்படியிருந்தும் அன்னோர், பிறர் யார் யாரை காப்பாற்றிக் கொள்ள விரும்பினரோ அவர்களைக் காப்பாற்றிக் கொள்ள இயலாதவர் களானார்கள். எனவே, அவர்களில் யார் யார் யோக்யதையுடையவர் களாய் இருந்தனரோ அவர்கட்கு (அவர்களின் நல்லொழுக்கத்துக்

கான) நற்பயனை அருள் பாலித்தோம். ஆயினும் அந்த (பூர்வ கால) மக்களில் பெரும்பாலோர் (வழி கெட்ட) பாபிகளாய்ப் போனார்கள். (ஸூரா : ஹதீத் ; ருகூ 4.)

அல்லாஹ், உங்கள் இரகசியச் செயலை கவனிக்கிறான்.

(ஏ நபியே,) வானத்தின் மீதுள்ளவைகளையும், பூமியின் பால் உள்ளவைகளையும் அல்லாஹ் மிகமிக நன்கறிந்தவனா யிருக்கிறானே, இதை நீவர் (பிரத்தியக்ஷமாய்) அறிந்திலையா? எனவே மூன்றுபேர் சேர்ந்து ஏதேனும் ஆலோசனை செய்தால் நிச்சயமாக நான்காவது பேர் வழியாய் ஆண்டவன், அதை (ரகசியமாய்) கவனித்துக் கொண்டிருக் கிறான். ஐந்துபேர் சேர்ந்து ஆலோசனை செய்தால், ஆண்டவன் ஆறு வதாக (அதனை) கவனித்துக்கொண்டிருக்கிறான். (ரகசிய ஆலோசகர்) அதைவிடக் குறைவாக யிருந்த போதிலும் அதைவிட அதிகமாக இருந்தபோதிலும், கட்டாயம் ஆண்டவன், அவர்களுடன் (கலந்தி ருந்து) கவனிப்பவனாகவே உள்ளான். எனவே, அந்தப் பேதையர்கள், (உலகில்) என்னென்ன கருமங்கள் புரிந்து கொண்டிருப்பினும், மறுமை வாழ்வின்போது (கியாமத்தில்), இறைவன் அதையெல்லாம் (பிரத்தியக்ஷமாய்) எடுத்துக்காட்டுவான். சிறிதும் ஐயமின்றி, அல் லாஹ் (அந்தரங்கம். பகிரங்கம்) எல்லாவற்றினையும் நன்கறிந்தவனாக யிருக்கிறான். (ஸூரா : முஜாதிலா, ருகூ : 2.)

இறைவன் உங்கள் மனதிலுள்ளதை அறிகிறான்.

வானங்களில் உள்ளவற்றையும், பூமியில் உள்ளவற்றையும், அல் லாஹ் நன்கறிந்து கொண்டே இருக்கிறான். இன்னும் நீங்கள் மறைந் திருந்து (ரகசியமாய்) செய்கிறீர்களே அதையும், நீங்கள் பகிரங்கமா யிருந்து (வெளிப்படச்) செய்கிறீர்களே அதையும் அவ்விறைவன் நன்கு அறிகின்றான். மேலும், இறைவன், (ஜனங்களின்) ஹிருதயங் களில் உதிக்கும் எண்ணங்களையும் நன்கறியக்கூடியவனாக இருக்கின் றான். (ஸூரா : தகாபுன் ; ருகூ : 1.)

ஒரு நன்மைக்கு இருபங்கு புண்ணியம் உண்டு.

அல்லாஹ்வுடைய நற்காரியங்களுக்கு அழகான கடனாகக் கொடுத் துதவுவீர்களாயின், அவன் உங்களுக்கு ஒன்றுக்கு இரண்டத்தனையாக (புண்ணிய பலன்) தந்தருள்வான். மேலும் உங்கள் பாபங்களையும் மன்னித்தருள்வான். அல்லாஹ், (புண்ணிய கார்ய) மகிமையை அறிபவ னாகவும், சகிப்புத்தன்மை யுடையவனாகவும் இருக்கின்றான். (ஸூரா : தகாபுன் ; ருகூ : 2.)

அற்பப் பொருளை மனிதனுக்கினன் அல்லாஹ்.

இவ்விஷயத்தில் கிஞ்சிற்றேனும் சந்தேகமில்லை: (அதாவது) மனுஷ்யன் (ஆதியில்) ஓர் அற்பபொருளாகக்கூட மதிக்கப்படாத, உருவமில்லாத(நாதபிந்து) வஸ்துவாக இருந்த காலமும், மனித நிலைமையில் இருந்தது. அதன்பின் நாம் மனிதனை (ஆண்-பெண் கூட்டுறவால் வெளிப்படும்) இந்திரியத்துளிக் கலப்பினுல் உண்டாக்கி (உருவாக்கி)னேம். இவ்வாறே மனிதரை நாம் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு (விந்துவி லிருந்து உருவத்துக்கு, பால்யத்திலிருந்து மூப்பிற்கு அல்லது இம்மையிலிருந்து மறுமைக்கு) கொண்டு போகிறோம். பிறகு நாமே அம்மனித உருவத்தை கேட்கக் கூடியவனாகவும் பார்க்கக் கூடியவனாகவு மாக்கிவைத்தோம். மேலும் அவனுக்கு நாம் (சீரான) மார்க்கத்தையும் காட்டிக்கொடுத்தோம். இப்படியெல்லாம் யாம் (சகாயம்) செய்திருந்தும், அம்மாந்தரில் ஒரு சாரார், நன்றி செலுத்துகிற (முஸ்லிம்)களாகவும், மற்றொரு சாரார் மாறுபாடு செய்கிற (காபிரான)வர்களாகவும் மாறிப்போய் விடுகின்றனர். (ஸூரா: தஹர்; ருகூ : 1.)

அல்லாஹ் ஏகன், பற்றற்றோன்.

(ஏ நபியே! ஜனங்களுக்கு இங்ஙனம்) சொல்லிக்காட்டுவீராக: அல்லாஹ் (ஆகிய இறைவன்) ஏகனுவன்; அல்லாஹ் பற்றற்றவனுவன். அவன் யாரையும் (புத்திரனுகப்) பெறவேயில்லை; அவனும் யாராலும் புத்திரராய் பெற்றெடுக்கப்படவுமில்லை. (இதெல்லாவற்றைவிட்டுத் தூயவன் அவன்)அவனைப்போன்ற மதிப்பிணையுடையோன் எவனுமேயில்லை. (ஸூரா : இக்லாஸ்.)

ஈமானுடைய நல்லோருக்கு நற்செய்தி.

எவர் ஈமான் கொண்டு (பக்தராக) இருக்கிறாரோ அவருக்கு (இவ்வாறு) நன் மாருய நற்செய்தி கூறுவீராக: அன்னவர்கட்கு (மறுமையில் சுவனபோக சாதனம் அளிக்கப்படுமே) அந்த உத்தியானவனத்தின் கீழே நீராறு ஓடிக்கொண்டிருக்கும். அங்கு அவர்கள் எப்போதேனும் மதுரகனியொன்றை புசிப்பார்களாயின் 'ஆஹா! இது நாங்கள் முன்னர் புசித்தோமே அப்படிப்பட்ட கனியாக இருக்கிறதே' என்று வாய்விட்டுக் கூறுவார்கள். ஏனெனின், அந்த தெய்வீகக் கனி (ருசியில்) பூலோகத்துக் கனிவர்க்கத்து ஒப்பானதாகவே இருக்கும்: இன்னும், அன்னவர்கட்கு, அங்கே பரிசுத்தமான ரூபலாவண்யமுள்ள மாதர்களும் (வாழ்க்கைத் தோழிகளாய்) இருப்பர். அன்னோர் அந்த சாஸ்வதப் பூங்காவில் சதாசர்வகாலமும் உறைந்திருப்பார்கள். (ஸூரா. அல்பகரா ; ருகூ : 3.)

(தொடரும்.)

இரத்தச் சின்னம்

(தொடர் கதை 4—வது பகுதி)

7-வது அத்தியாயம்

டாம் அதைக் கேட்டதும் ஸ்தம்பித்து திகிலடைந்தவனைப் போல் ஒரு வார்த்தையும் பேசமுடியாமல் நின்றான். அந்தபெண் ஒரு டாக்ஸி காரில் ஏறிச் சென்றாள்.

"அந்த கடையில் அவளுக்கு என்னவேலை?" என்று பென்டன் சொல்லியவாறு அந்த கடையை நோக்கினார்.

"திருடியா? கடவுளே!... நீங்கள் எங்குபோகிறீர்கள்?" என்று அந்த கடையை நோக்கி போகும் பென்டனை தடுத்துகேட்டான்.

"எதற்கு அந்த கடைக்கு வந்தாளென்று விசாரிக்க" என்றார் பென்டன்.

"ஏதாவது பணம் தேவைப்பட்டிருக்கலாம். கடன் வாங்க போயிருப்பாள். கடன் வாங்குவது தப்பா?" என்று டாம் கேட்டான்.

அதற்கு யாதும் பதில் சொல்லாமல் பென்டன் நேராக அக்கடைக் குப் போனார். பின் டாமும் சென்றான். அங்கு பென்டன் விசாரிக்க, அக்கடையின் மேனேஜர், அந்த பெண் அடமானம் வைத்த ஒருசிறிய பொன்னால் செய்த புத்தசிலையைக் காண்பித்தான்.

வந்து விசாரிப்பவர் போலீஸ் இன்ஸ்பெக்டர் பென்டன் என் றறிந்த அக்கடையின் மானேஜர் "இந்த சிலையின் மதிப்பு சுமார் 100 பவுண்டிருக்கும். அவள் 10 பவுண்ட்தான் கேட்டாள்" என்றான்.

இவைகளைக்கூடவே யிருந்து கவனித்துவந்த ஸிம்ஸன் "இதை அடமானம் வைக்க காரணம் என்ன சொன்னாள்?" என்று கேட்டார்.

"தனக்கு தற்போது பணம் அவசரமாகத் தேவை என்றும், இதைப்போல் நூதன சாமான்கள் தனது தகப்பனாரிடம் அதிகமிருப்ப தாகவும் அடமானத்தை திருப்ப சுலபமாக யிருக்க இந்த வஸ்துவுக்கு குறைவாக 10 பவுண்ட் கேட்டதாகவும் சொன்னாள்" என்று மேனேஜர் சொன்னார்.

"அவள் பெயர் அட்ரஸ் சொன்னாளா?"

"குலோரியா. 47, பெர்கூஸன் பார்க்" என்று மானேஜர் சொன்னார்.

"அது கிரீனுடைய அட்ரஸ் அல்லவா?" என்று ஆச்சரியத்துடன் ஸிம்ஸன் கேட்டார்.

டாமுக்கு அது கிரீனுடைய அட்ரஸ் என்று தெரியும். அதுவுமல்லாமல் அந்த புத்த சிலையைப்போல் அநேக நூதன சாமான்கள் கிரீன் வைத்திருப்பதுவும் தெரியும்.

இன்ஸ்பெக்டர் அந்த கடை மனேஜரிடம் ஒரு ரஸீது எழுதி கொடுத்துவிட்டு, அந்த சிலையை வாங்கி தனது ஜேபியில்போட்டு, "நாம் கிரீன் வீட்டிற்குபோய் விசாரிக்கலாம்" என்றார்.

"பாவம்! இந்த பெண் ஏதோ முன்பின் யோசியாமல் செய்து விட்டாள். பணத்தைகொடுத்து அடமானத்தை திருப்பி, சிலையை சொந்தகாரரிடம் கொடுத்து விட்டால் போதுமா?" என்று டாம் அவசரமாக கேட்டான்.

இதைக்கேட்ட ஸிம்ஸன் டாமை முறைத்துப் பார்த்து "உனக்கு இந்த குலோரியா பெண் தெரியுமா?" என்று கேட்டார்.

டாம் தலையை அசைத்தானே தவிர வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை. தான் அவ்வாறு சொல்லியது தனக்கே வெட்கமாகயிருந்தது.

"அதெல்லாம் முடியாது. நான் கிரீன் வீட்டிற்குப்போய், அவருக்கு தெரிந்து இதை அடமானம் வைக்கப்பட்டதா என்றறியப் போகிறேன்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"அப்படியாகில் நீங்களே தனியாக போங்கள்" என்றான் டாம்.

டாமுக்கு தனக்கு முன்னால் அவள் அவமானப்படுவது பிடிக்கவில்லை. பென்டன் சென்றதும், ஸிம்ஸனிடம் பென்டனைப்பற்றி இழிவாக பேசினான் டாம்.

"அவளாவது இந்த சிறிய அற்பதிருடை செய்வதாவது! நான் குலோரியாவைப் பார்த்ததும் ஒன்றும் சொல்லிராவிடில் இந்த பென்டன் அவளைப் பார்த்திருக்க முடியாது" என்று டாம் சொன்னான்.

"இல்லை அவர்தான் அவளைப்பார்த்தது" என்று ஸிம்ஸன் சொல்லிக்கொண்டே, டாம் முதுகைதட்டிக் கொடுத்து, "நீ ஏன் அவளை பற்றிக் கவலைபடுகிறாய். ஓ! அவள் கிரீன்வீட்டில் வேலைசெய்கிறாளல்லவா? அதனால் நீயும் அவளும் அடிக்கடி சந்திப்பதுஉண்டா?" என்று கேட்டார்.

"ஆம். இவர் இந்த சிறிய கேஸில் எடுத்துக் கொண்ட சிரத்தையில், சிறிதளவை இரத்த சின்ன சங்கத்தை பிடிப்பதற்கு உபயோகித்

திருந்தால் இன்று எனது தகப்பனர் உயிரோடிருந் திருப்பார்'' என்று அருவெறுப்புடன் சொன்னன்.

ஸிம்ஸன் அவனை தட்டிக் கொடுத்து, சமாதானப்படுத்தி, தனது ஆபீஸுக்கு கூப்பிட்டு சென்று வேறு சந்தோஷமான விஷயங்களை பேசிக் கொண்டே, அவன் எண்ணத்தை மாற்றினர். இவர்கள் பேசிக் கொண்டே யிருக்கும் போது, டெலிபோன் மணி அடித்தது. ஸிம்ஸன் எடுத்துக் கேட்டார்.

"குலோரியாவை சிறை செய்து விட்டேன்'' என்று பென்டன் டெலிபோனில் சொல்ல, அதைக் கேட்ட ஸிம்ஸன் பதில் சொல்லாமல் டெலிபோனை வைத்து விட்டார்.

"என்ன? குலோரியாவை பிடித்து விட்டாரா?'' என்று டாம் துடி துடித்துக் கேட்டான்.

"டாம்! அவளோ திருடி. கிரீனை ஏமாற்றி வேலைக்கு அமர்ந்தாள்' அதுவுமல்லாமல் தான் யாரென்பதை உனக்கு தெரிவிக்காமல் உனது அன்பையும் பெற்று உன்னை ஏமாற்றி யிருக்கிறள்'' என்ருர் ஸிம்ஸன்.

"அவள் திருடியாக இருக்கலாம்! கொலை செய்யலாம்! இருந்தாலும் அவளை நான் நேசிக்கிறேன்'' என்ருன் டாம் தைரியமாக.

8-வது அத்தியாயம்.

பயத்தில் நேரத்தைக் கஷ்டத்துடன் கழித்துக் கொண்டிருந்த கிரீனுக்கு இன்ஸ்பெக்டர் பென்டன் வந்ததும், பெர்ரி கொலையுண்ட சமாச்சாரம் ஞாபகம் வந்து நடுங்கினர்.

"என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்! அந்த திருட்டுக் கூட்டம் வேறு எதும் செய்யப் போகிருர்களா?'' என்று பதை பதைப்புடன் கேட்டார்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. குலோரியா உங்கள் வீட்டில் எவ்வளவு நாட்களாக யிருக்கிறள்?''

"எனது செக்ரடரியாக சென்ற 3 மாதமாக வேலை பார்த்து வருகிறள். ஏன்?''

"அவளுக்கு என்ன சம்பளம் கொடுக்கிறீர்கள்?''

கிரீன் மிகவும் குறைந்த சம்பளத்தை சொல்லி, "அத்துடன் சாப்பாடும் கொடுக்கிறேன். மாலை நேரம் ஓய்வு'' என்று தான் கொடுக்கும் சம்பளம் குறைந்ததாக தோன்ருதபடி மதிப்பாக சொன்னர்.

"அவளுக்கு தற்போது அவசரமாக பணம் தேவை ஏற்பட்டதா?"

கிரீன் இன்ஸ்பெக்டரை வெறித்துப் பார்த்தார். "ஏன்—ஆம். நேற்று 5 பவுண்ட் அட்வான்ஸாக கேட்டாள். நான் கொடுக்க மாட்டேனென்றேன். செய்யாத வேலைக்கு பணம் கொடுப்பது முட்டாள் தனம். அவ்வாறு கொடுப்பவன் திவாலா எடுக்க வேண்டியது தான்"

"உங்களிடம் விலையுயர்ந்த அநேக நூதன சாமான்கள் உண்டா? அதில் ஏதாவது காணேமா?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டதும், தன்னையறியாமல் தான் உட்கார்ந்திருந்த நாற்காலியி னின்றும் குதித்தார் கிரீன். தனது சாமான்களுள் திருடு போயிருக்கக் கூடுமென்று நினைத்ததும் அவர் மூளை கலங்கியது. ஒரு வார்த்தையும் சொல்லாமல் ஓடினார் ஓட்டமாக ரூமைவிட்டு. சுமார் 3 நிமிஷத்திற்குள் திரும்பி ஓடிவந்தார். கண்கள் சிவந்தன. கோபம் அளவுக்கு மீறியது. "எனது புத்தர்! 100 பவுண்ட் விலையுடையது! காலையிலிருந்தது" என்று திடு திடுத்தவாறு அலறினார்.

"குலோரியாவைக் கூப்பிடுங்கள்" என்று சாந்தமாக இன்ஸ்பெக்டர் சொன்னார்.

குலோரியா ஒன்று மறியாதவள் போல் தைரியமாக வந்து கிரீனைப் பார்த்தவாறு பக்கத்தில் நின்றாள். ஆனால் கிரீனின் முகத்தைப் பார்த்ததும், தனது திருடு வெளியாகி விட்டதென்று அறிந்தாள். கிரீனுக்கு உடனே கேட்க, வார்த்தைகள் வாயிலிருந்து வாவில்லை. கஷ்டத்துடன் "நீ—நீ எனது சாமான்களுள் ஒன்றை திருடி விட்டாய். நீ—திருடி" என்று கோபத்துடன் பிதற்றினார்.

குலோரியா சாந்தமாக, "நான் உங்களிடம் பணம் கேட்டேன். உங்களைப் போல் பங்கியை நான் பார்த்ததில்லை. யாரும் நான் கேட்டதற்கு கொடுத்திருப்பார்கள்" என்றாள்.

"நீ—நீ—இவ்வாறு பேசுகிறாய். இன்ஸ்பெக்டர்! இவளைப் பிடித்து திருடியதாக குற்றஞ் சாட்டுங்கள். நீ—ஜெயிலுக்குப் போனால் புத்தி வரும்... ... நில்லு, நில்லு. இன்னும் ஏதாவது சாமான்கள் குறைகிறதா? பார்த்து வருகிறேன்" என்றார் கிரீன்.

"உங்களுக்கு ஏன் அவ்வளவு கஷ்டம். நான் வேறொன்றையும் எடுக்கவில்லை" என்று சொல்லியவாறு இன்ஸ்பெக்டருடன் நடந்தாள்.

"சாவிகளைக் கொடு. உன்னை நம்பி, எனது கடிதங்களைப் படிக்கவும் வசதி கொடுத்திருந்தேனே!" என்று கிரீன் கைசேதப் பட்டவாறு சொன்னார்.

"நான் உங்கள் கடிதத்தில் ஒன்றை உடைத்துப் பார்த்தேன். மிக சந்தோஷகரமான கடிதம்" என்று சொல்லும் போது, அந்த கடிதம் தனது கையில் வைத்திருப்பது ஞாபகம் வரவே, அதை கிரீன் வசம் கொடுத்தாள்.

கிரீன் அந்த கடிதத்தை வாங்கி அதிலுள்ள இரத்த சின்னக் குறியைப் பார்த்ததும் அவர் தலை சுற்றியது. அதின் நடுவே எழுதிய விஷயங்களை படிக்க முடியவில்லை. எழுத்துக்கள் மங்கலாக தோன்றி யது. ஸ்மரணை யற்றவாறு நாற்காலியில் சாய்ந்தார். கையிலிருந்த கடிதம் கீழே விழுந்தது.

9-வது அத்தியாயம்.

மாஜிஸ்ட்ரேட் மிக இரக்க முடையவர். அவருக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. இன்ஸ்பெக்டரைப் பார்த்தார். இன்ஸ் பெக்டர் முகத்திலோ கோபமுமில்லை. இரக்கமு மில்லை. கூண்டில் நிறுத்தப் பட்ட பெண்ணைப் பார்த்தார். அவள் அந்த கூண்டில் நிறுத்தப் பட்டதால், அவளுடைய இயற்கை அழகு பன்முறை அதி கரித்ததாகத் தோன்றியது.

தனது முன் வைக்கப்பட்ட குற்றஞ் சாட்டுப் பத்திரத்தைப் படித்தார். "இந்த பெண்ணின் நடத்தைகளைப் பற்றி இந்த சம்பவத் திற்கு ஏதாவது தெரியுமா?" என்று கேட்டார்.

"போலீஸ் இவளை அதிக நாட்களாக கவனித்து வருகிறார்கள். இதற்குமுன் இவள் அகப்படவில்லை, இதுதான் முதல் தடவை"

மாஜிஸ்ட்ரேட் பெண்ணை இன்னொரு முறை பார்த்தார். "நீ எவ்வாறு இச்சம்பவத்தில் மாட்டிக் கொண்டா யென்றே புரியவில்லை. நீயோ படித்தவள், செக்ரட்டரி வேலை பார்த்து வந்தவள். விலையுயர்ந்த சாமானை திருடி சொற்ப பவுண்டுக்கு அடமானம் வைத்துள்ளாய். உனக்கு அவசியமாக பணம் தேவை பட்டதன் காரணத்தால் செய் திருக்கக் கூடும். எப்படி யிருந்தும் செய்தது தவறு. இது நீ செய்த முதல் தவறாக யிருப்பதால் இந்த கோர்ட் கலையும் வரை யிருந்து போக லாம். இனியாவது நேரான வழியைக் கடைப் பிடித்து உண்மையாக வாழ்ந்துவா" என்றார் மாஜிஸ்ட்ரேட்.

அவள் மாஜிஸ்ட்ரேட்டுக்கு தலை குனிந்து, கூண்டை விட்டு, போலீஸ் ஆபீஸிற்குள் போனாள்.

அந்த கோர்ட்டில் வந்திருந்த கிரீனும் உடன் எழுந்தார். இவரோ பெரிய பணக்காரர். இருந்தாலும் இவருக்கு பணம் தான் பிரதானம். ஒவ்வொரு இரவும் தான் படுப்பதற்கு முன் தனது ஜேபியிலுள்ள

பணத்தை எண்ணிப் பார்த்து விட்டு படுப்பார். இந்த பெண்ணுக்கு பதிலாக இவருடைய தாயாரே இவர் சாமானை திருடியிருந்தாலும் அவளையும் சிறை செய்ய ஏற்பாடு செய்யக் கூடியவர். குலோரியா திருடிய குற்றத்தைவிட கடைசியாக போகும் போது இரத்த சின்ன கடிதம் கொடுத்ததை பெருந் தப்பாக கருதினார் கிரீன்.

இவருக்கு பின்னால் கோர்ட்டை விட்டு வெளிவரும் இன்ஸ்பெக்டரைப் பார்த்து "இதைப் போலுள்ள பெண்கள் மிக அபாயமானவர்கள். இவள் சாதாரண திருடியோ அல்லது இரத்த சின்ன சங்கத்தில் சேர்ந்தவளோ! என்னிடம் 40000 பவுண்ட் கேட்கிறார்கள். 40000! எனக்கு ஏதும் அபாயம் ஏற்படாமல் கவனிப்பது உங்கள் பொறுப்பு. விளங்குகிறதா? உங்கள் பொறுப்பு" என்றார் கிரீன்.

"விளங்குகிறது. ஆனால் இந்த பெண் மிக சிறியவள். அந்த கூட்டத்தைச் சேர்ந்தவளா யிருக்காது" என்று இன்ஸ்பெக்டர் சொன்னார்.

"என்ன! சிறியவளா! இப்பொழுதுதான் தண்டனை கொடுக்க வேண்டும். சிறிய வயதில் தப்பிதம் செய்தால் உடனே பிடித்து தண்டனை கொடுத்தால், பின் நல்லவளாகக்கூடும்"

"ஆம்! நீங்கள் சொல்வதும் சரிதான். சிறுவர்களை நல்ல வழியில் கொண்டுவருவது மிககஷ்டம்" என்று இன்ஸ்பெக்டர் சொன்னார். இதற்கிடையில் கிரீனின் கார் முன் வந்து நிற்கவே, அதில் ஏறிச் சென்றார்.

இன்ஸ்பெக்டர் திரும்பிப் பார்க்க பக்கத்தில் டாம் நிற்பதைக் கவனித்தார். "டாம்! அந்த பெண்ணை பார்க்க வந்திருக்கிறாயோ?"

"ஆம். இன்னும் எவ்வளவு நேரம் இங்கிருப்பாள்?"

இன்ஸ்பெக்டர் டாமை முறைத்துப் பார்த்தார். பிறகு "டாம்! நான் சொல்வதைக் கேள். என்மேல் கோபப்படாதே. நீ குலோரியா பேரில் அதிக ஆசை கொண்டுள்ளவனாகத் தெரிகிறது. அது அவ்வளவு நன்றாக தோன்றவில்லை" என்று மெதுவாக சொன்னார்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்! இது இட்டுக்கட்டிய திருடு. அந்த பிசுநாரி கிரீன் செய்த வேலை!"

"இல்லை! அவளே திருடை ஒத்துக் கொண்டாளே. அதுவுமல்லாமல் நாம் தானே அந்த கடையிலிருந்து வருவதைப் பார்த்தோம்"

"அவள் ஒத்துக்கொண்டதற்கு காரணம் ஏதாவது யிருக்கும். அவளாவது திருடுவதாவது. எதற்காக திருடவேண்டும்? அவளுக்கு தேவையான பணம் கொடுக்க நான் தயாராயிருக்கிறேன். இதில் ஏதோ

மர்மமிருக்கிறது. எனக்கு விளங்கவில்லை" என்று டாம் சொல்லும்போது கோர்ட்டைவிட்டு வெளிவந்தாள் குலோரியா.

அவள் டாமைப் பார்த்ததும் முகம் வெளுத்து, "நீங்களும் கோர்ட்டுக்கு வந்தீர்களா?" என்று கேட்டாள்.

"ஆம்" என்று தலையை அசைத்தான்.

"நீங்கள் ஏன் வந்தீர்கள்! உங்களுக்கு எப்படி தெரிந்தது" என்று கேட்கும்போது பக்கத்தில் இன்ஸ்பெக்டர் நிற்பதை யறிந்து பேச்சை நிற்பாட்டினாள்.

"இது பொய்யல்லவா? குலோரியா என்னிடம் சொல். யாரோ உன்பேரில் வேண்டுமென்று இந்த திருட்டு குற்றத்தை சுமத்தி யிருக்கிறார்களல்லவா? உன்னை கெடுக்க சூழ்ச்சி யல்லவாஇது?" என்று டாம் கேட்டான்.

"சூழ்ச்சி ஒன்றுமில்லை. நான் தான் திருடினேன்" என்று மெதுவாக சொன்னாள்.

"ஏன்? ஏன்?.... எதற்காக?" என்று கவலையுடன் கேட்டான்.

"காரணத்தை உங்களிடம் தெரியப்படுத்துவதால் என்ன பிரயோஜனம்? எதற்கும் எனக்கு பணம் தேவைப்பட்டதால் செய்தேன் காரணம் போதுமா?" என்று சிறித்தவாறு கேட்டாள்.

"நான் நம்ப மாட்டேன். நீ இந்த திருடு செப்பவளல்ல" என்று டாம் சொல்ல, அவள் இன்ஸ்பெக்டர் பக்கம் திரும்பி "நீங்கள்தான் அவரிடம் சொல்லுங்கள். நான் போய் வருகிறேன்" என்று சொல்லி புறப்பட்டாள்.

"எங்கே போகிறாய்?" என்று டாம் கேட்டான்.

"நான் வீட்டுக்கு போகிறேன். நீங்கள் தயவுசெய்து என்னுடன் வரவேண்டாம்" என்றாள்.

"உனக்கு வீடில்லையே!"

"தங்க இடம் உண்டு"

"அப்படியாகில் நானும் உன்னுடன் வருவேன்" என்று டாம் சொல்லிக்கொண்டே அவளுடன் நடந்தான். அவள் ஒன்றும் தடை செய்யாமல் நடந்தாள். நேராக ரெயில்வே ஸ்டேஷனுக்கு போனாள். டாமும் கூடவே சென்றான். அங்கு அவள் திரும்பி "நான் வீட்டுக்கு போகவேண்டும்" என்று இரக்க குரலில் சொன்னாள்.

"நீ போய் என்ன செய்யப்போகிறுய்? இச்சம்பவத்திற்கு பின் உனக்கு யார் வேலைகொடுப்பார்கள்?" என்று கேட்டான்.

"இச்சம்பவம் அப்படி பெரிய மோசமானதல்ல" என்று சொல்லி ஸ்டேஷனுள் செல்லத் திரும்பினுள்.

டாம் உடனே அவள் கையைப்பிடித்திழுத்து, "குலோரியா! நான் சொல்வதைக்கேள். நான் உன்னை முழுமனதுடன் நேசிக்கிறேன். உன்னைக் கலியாணம் செய்துகொள்ள பிரியம். ஆனுல் இதை முன்பே உன்னிடம் தெரிவிக்கவில்லை என்றுலும் உனது மனதிற்கும் தெரிந்திருக்கும். ஆதலால் நீ என் வாழ்க்கையினின்றும் பிரிந்து போவது எனக்குபிடிக்கவில்லை. நான் சொல்வது விளங்குகிறதா? நீ திருடி என்று நான் நம்பவில்லை" என்றுன்.

குலோரியா மெதுவாக அவன் பிடியினின்றும் விலகி, "டாம்! நான் சொல்வதைக் கேளுங்கள். நானே ஒரு திருடி. அதுவுமல்லாமல் என்னைப்பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது. உங்களுக்குத்தெரிந்த தெல்லாம், நான் ஒரு அழகியபெண், அவ்வளவுதான். ஆதலால் முட்டாள்தனமாக என்னுடன் சகவாசம்வைத்து உங்கள் வாழ்க்கையை வீணுக்காதீர்கள். சில தினங்களுக்கு என்னைப்பின் தொடர்வதைவிட்டு விட்டால் உங்கள் பிரியமும் பறந்துவிடும். பின்னுல் நாம் சந்திக்கலாம். அதுதான் ஒழுங்கு" என்று சொல்லியவாறு டிக்கட் வாங்குவதற்கு சென்று விட்டாள். (தொடரும்.)

பஞ்சரத்தினத் தாலாட்டு

இது 1-வது ஞானத் தாலாட்டு, 2-வது பாத்திமா நாயகத்தின் பேரில் சுகானந்தத் தாலாட்டு, 3-வது முஹியித்தீன் ஆண்டவர்கள் பேரில் மணிமந்திர தாலாட்டு, 4-வது ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் பேரில் மீறுன் தாலாட்டு, 5-வது பாலர்களுக்கு வாழ்த்தக்கூடிய பாலர் தாலாட்டு ஆகிய 5 தாலாட்டுகள் சேர்த்து நேர்த்தியான காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணு. 3

அறபுத் தமிழ் விலை அணு. 10

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறுஸ் 5.

கல்வியின் மகாத்மியம்

எம். எஸ். காஜா முஈனுத்தீன். தேன்காசி

கல்வி கற்றல், கற்பித்தல் இவ்விரண்டும் இவ்வுலகில் கிடைப்பதற்கரிய உயர்ந்த பொக்கிஷமென கருதப்படுகிறது. இவ்வுலகில் இவைகளுக்கு நிகரான வஸ்து இல்லே. கல்வி அறியாமையை ஒழிக்கிறது. கல்விக்கு அழிவில்லே. செலவினல் குறைவில்லே. எனினும் செலவினல் போதிப்பதினல் நாளுக்கு நாள் வளருகின்றன. கள்வர் வழிப்பறியர்களின் பயம் அதற்கில்லே. நாம் ஜீவிக்கும் அளவு உலகிலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் நம்மிட மிருக்கின்றது. கல்வியோ நமக்கு மறுமையிலும் நன்மையளிக்கும் நண்பனுக இருக்கின்றது. அற்பர்களே மாசற்ற தங்கமாக்குகிறது. சுருங்க கூறுமிடத்து தாழ்ந்தவன், உயர்ந்தவன், அறிந்தவன், அறியாதவன், எழியவன், சீமான், முதலாளி, தொழிலாளி, அரசன், பிரஜை யாவர்க்கும் இக்கல்வி ஒப்புவமையற்ற அணிகலனுக இருக்கின்றது. எழியவன் இக்கல்வியினல் பொருளே சம்பாதிக்கின்றான். அறியாதவன் இக்கல்வியினல் அறிஞனுகின்றான். ஒரு பாமர மனிதன் இக்கல்வியினல் அரசு செலுத்துகிறான். இவைகளே கல்வியின் மகாத்மியமாகும்.

கல்வி படித்தல், படிப்பித்தல் இவ்விரண்டின் உயர்வுகளே பெரும்பாலோர் அறிகின்றனர். இன்று ஓதுக்கப்பட்ட மக்கள் தொடுத்து உயர் வகுப்பினர் என கருதப்படுகிறவர்கள் வரை கல்வி கற்பதும், போதிப்பதும் தங்கள் கடமை என கருதுகின்றனர். எனினும் முஸ்லிம்களேத் தவிர்த்து, மற்ற மக்கள் கல்வியின் கடமைகளே ஒருக்கால் அறியாம லிருந்தனர். அவர்களின் வேதத்தில் கட்டாயப்படுத்தவுமில்லே. கல்வியின் பிரதானம் அவர்களின் வேதத்தில் காணப்படவுமில்லே. கல்வி கற்பது கடமை யென்றிருந்தாலும் கற்பதும், கற்பிப்பதும் சுதந்திரமில்லே ஏனைய மதத்தில். நமது இஸ்லாமிய மதம் தனது அடிப்படையிலே கல்வியை கட்டாயக் கடமையாக ஆக்கியுள்ளது. கல்விக்கு ஒரு காலமில்லே. சிறு பிராய முதல் வயோதிகத் தன்மை வரை எவரும் எக்காலத்திலும் படிக்கயேலும். கல்விக்கு ஒரு குறிப்பிட்ட மக்கள், தேசம், காலம் எவற்றிற்கும் சொந்த உடமையல்ல.

இருபது நூற்றுண்டுகட்கு முன் படித்தல், போதித்தல் இவ்விரண்டின் உரிமைகள் அகில உலகத்தில் எல்லா மக்களிடத்தும் இல்லாமல் இருந்தது. இருபதுநூற்றுண்டுகட்கு மத்தியில் இன்று நிலவும் கல்விச் சுதந்திரம் பரவி முன்னேறிக் கொண்டிருக்கிறது. பெண்கள், தீண்டப்படாதார் யாவருக்கும் கற்கவும், கற்பிக்கவும் சுதந்திரமில்லாதிருந்தது. இஸ்லாமோ வெனின் ஆண், பெண், விலைபட்டவன், விலைபடாதவன், சுதந்திர புருஷன், நீக்ரோ ஜாதியினர், அரேபியன் அஜமியன் யாவருக்கும் கற்றல், கற்றுக் கொடுத்தல், பேச்சு, பிரச்சாரம், ஆட்சி யாவற்றையும் சுதந்திரமாக அளித்துள்ளது. இவ்வித மதத்தை நாம் அடைந்தும் நம் சமுதாயத்தினர் பிற்போக்கிலேயே பீடிக்கப்பட்டிருக்கின்றனர். நாளுக்கு நாள் பிற்போக்கிலும், தாழ்ந்த நிலையிலும் செல்லுகின்றனர். தங்களின் இழி நிலையை உணர்கின்றவர் எவருமிலர். இதைப் பார்க்கினும் அறியாமை வேறுளதோ !

இன்றய உலகம் வியக்கத்தக்க முறையிலேயே கலையை வளர்த்து செல்லுகின்றது. நம் முஸ்லிம்களில் சிலரும் கல்வியைக் கற்கின்றனர். எனினும் கல்வியின் புனிதத்தன்மையை பிரதிபலிக்கவில்லை, பிரகாசிக்கவில்லை. ஏனெனில் வழிப்பாடு, பொருமை, பணிவு, அல்லாஹ்வின் நம்பிக்கை, கருணை, இரக்கம், பரோபகாரம், மன்னித்தல் ஐக்கியம் போன்றவையே கல்வியின் உண்மை தத்துவமாகும். சர்வ உலகமும் இவ்வுயற் குணங்களின் பக்கல் சிந்திப்பதே இல்லை. மேலும் யுத்தம், பொறுமை, கொள்ளை, வழிப்பறி, பழிவாங்கல் இவைகளையே தனது கடமையென கருதுகின்றனர். இதுவே இன்றைய உலகின்நிலை. இதனுல் இன்று உலக மக்கள் புலி, சிறுத்தை, சிங்கம், பாம்பு போன்ற துஷ்ட விலங்குகளாய் தங்களின் சகோதர நண்பர்களுக்கு விரோதமாய் நடந்து வருகின்றனர். எனவேதான் இகபற வாழ்விலே நற்பாக்கியமற்றவர்களாய் ஆகிவிடுகின்றனர். இன்று நம்மில் கலையின் பலன் அடியோடு எடுபட்டு விட்டது. காரணம், கல்விக்கிணங்காத செயல்களே யாகும். கற்பது ஒன்று நடப்பது ஒன்று என்பதே நமது நிலை. இதனுலேயே மரியாதை, அரசாங்கம் யாவையும் பிறரிடம் கொடுத்துவிட்டோம். மரியாதை ஆண்டவனுக்கும் அவனது றசூலுக்கும் முஃமீனீன்களுக்கும் உரியதென ஆண்டவன் கூறுகின்றுன். அவ்வித அவ்வாக்கிற்கு நாம் இலக்காக இல்லாது பல மையில் தூரத்தில் இருக்கிறோம். "செயலில்லாத கல்வி இறக்கையில்லாத பட்சிக்கொப்பாகும் கல்வியை விருத்திசெய்து சத்தியவழி செல்லாதான் அல்லாஹ்வைவிட்டும் அகன்றவன்" என்ற நபிகள் திலகம்(ஸல்)அவர்களின் இரு சொற்கள் நம்மை "சதா கற்றபடி நடக்க வேண்டும்" என தூண்டுகிறது. படிப்புடன் செயல் பிரதானம் என்ற கொள்கையே மற்ற மதங்களிடை ஒரு ஒப்பற்ற தனி வித்தியாசமாகும்.

நமது ஸஹாபாக்கள் செயலின் காரணத்தினாலேயே இஸ்லாமியப் பற்றில் மூழ்கி இருந்தனர். அல்லாஹ்வின் கருணையை அடைந்தனர் இவ்வுலகில் ஆட்சியை பெற்றனர். அரசர்களாய் பரிபாலித்தனர். அரச ஞானிகளாய் இருந்தனர். ஈருலகிலும் மேன்மைகளைப் பெற்றனர்.

சோதரீர்! நமது முஸ்லிம்களை பலவிடங்களிலும் சொல்லமுடியாத துயர்கள் வளைந்து வட்டமிடுகின்றன. இவ்வித ஆபத்தான நிலையில் உணர்ச்சி கொள்ளுங்கள். ஆண்டவன் பக்கலே அடைக்கலம் புகுதுங்கள், அவனையே நம்புங்கள், அவனையே பயப்படுங்கள். உங்களின் ஓர் உயிர், ஓர்மனம், ஓர் தேகம்போல் ஐக்கியப்பட்டு வாழுங்கள். மன ஊக்கத்துடன் நில்லுங்கள், ஆண்டவனைத் தவிர்த்து வேறுயாரையும் பயப்படவேண்டாம். அவன் நமது பக்கல் இருக்கிறான். அவனே உதவி தேடப்படுபவன்.

மஜ்மூஉ மவ்லூது.

இதில் றஸூலுல்லாவுடைய மவுலூதும், அதன் துஆக்களும, அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸெய்யிதி ஷைகி, மழைபைத்து, பீஹாப்பி ஸைய்தினா பைத்து, ஜாத்பி லுத்பிக முனாஜாத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் யெழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை அணா 15

ஷை மூன்று மௌலூதுகளும் அறபியில் கிளேஸ் காகிதம் கலிகோபைண்டு. இதன் விலை ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

பாவேலாவின் மர்மம்.

இது ஒரு அருமையான துப்பறியும் கதை. இதில் ஒரு பாங்கை மோசம் செய்ய சிலர் எத்தனித்ததையும் அது கைகூடாவண்ணம் செய்து அவர்களின் திருட்டு யோசனைகளை வெளியாக்கிய துப்பறியும் ஷம்ஸின் செயல்களும் விளக்கப் பட்டுள்ளது. விலை அணு. 8

தேவையுள்ளோர் 9 அணு ஸ்டாம்பு அனுப்பி வைத்தால் புக்போஸ்ட் மூலம் அனுப்பப்படும்.

லைலா மஜ்னூன்.

அரபு தேச சர்தாருடைய அருமைக் குமாரனுகிய மஜ்னூனென்னும் வாலிபன், அழகில் சிறந்த லைலா என்னும் ஒரு பெண்ணரசி பேரில் காதல் கொண்டு, ஒருவரை யொருவர் நேசித்து பல துன்பங்களுக்கு இலக்காகி, இறுதியில் சந்திக்கும் வரை நடந்துள்ள சரிதை இது. இது உர்தூ பாஷையில் லைலீ மஜ்னூனென்னும் பெயர் பெற்ற காவியமாக விளங்கி வந்ததை தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து அருமையான நாவலைப்போல் வசன ரூபமாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

விலை ரூ. 1-4-0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரூஸ் 5.

ஹஜ்ஜு மாதக் கடமைகள் யாவை?

(ரஹ்மத்துல்லா—ஆலிம்.)

இஸ்லாமிய வாழ்வில், முஸ்லிம்கட்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாதமும் முக்கியமானவைதாம். எவன் ஒருவன், என்று ஆண்டவனைத் தியானித்துத் தொழுது வணங்குகிறானோ அதுவே அவனுக்கு நன்னாள். என்றைய தினம் ஒருவன் ஆண்டவனை வணங்கித் தொழுவதில்லையோ அதுவே அவனுக்கு மிக மிகக் கெட்ட நாள்.

குறிப்பான முறையில், இஸ்லாமிய வாழ்வில், முக்கியமான மாதங்கள் மூன்று. 1-வது ரமலான் மாதம், 2-வது ஹஜ்ஜு மாதம், 3-வது மீலாது மாதம்.

ரமலான் மாதத்தில் நோன்பும், தராவீஹும், ஜக்காத்தும், ஸத்காவும் விசேஷமாக அநுஷ்டிக்கப்படுவதால், அம்மாதம் புனிதமான திங்களாய் கருதப்படுகிறது. ரபீவுல் அவ்வல் எனப்படும் மீலாது மாதம், நபிகள் நாயகம் லோக தயாளர் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருஜனனம் புரிந்த திங்களாதலின், அதன் தத்துவார்த்த விசேஷத்தால், அதுவும் விசேஷமான மாதமாய் கருதப்பட்டு, எங்கும் மீலாது ஜல்ஸாக்களும், மௌலிது ஓதல்களும், பாத்திஹா விருந்துக் களறிகளும் நடத்தப்படுகின்றன.

ஹஜ்ஜு மாதம்

ஹஜ்ஜு மாதமும் இஸ்லாமிய வாழ்வில், மேற்கூறிய இரண்டு மாதங்களைப் போல் அல்லது அவற்றை விடச் சிறந்த மாதம் என்றால் அது மிகைப்படக் கூறியதாகாது.

ஹஜ்ஜு மாதம் இஸ்லாமிய உலக மெல்லாவற்றிற்குமே விசேஷித்த மாதமாகும். இம்மாதத்தில் முஸ்லிம்கள், அதிகம் வணங்கித் தொழுது நன்மைக் காரியங்களை அதிகமாகச் செய்ய வேண்டும். நபில், சுன்னத் தொழுகை நிறைவேற்ற வேண்டும். குர்ஆன் ஷரீபின் ஆயத்துகளை அதிகமாய் ஓதி, பொருளுணர்ந்துப் பயன் அடைய வேண்டும். ஸத்காவும் தானமும் தர்மமும் பரோபகாரமும் அதிகம் புரிய வேண்டும்.

துல்ஹஜ்ஜு மாதம் 30 நாட்களுமே புனிதமானவைகளாயினும், அதன் முதற் பத்து நாட்களில் தான் அதிகமான விசேஷார்த்தம் பொருந்தி யிருக்கிறது.

"ஆண்டவனை வணங்குவதற்கு சிறந்த நாட்கள் எவை?" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு நபிகள் நாதர் (ஸல்) அவர்கள், "துல்ஹஜ்ஜு மாதத்தின் முதற் பத்து நாட்கள் தான் வணக்க ஒழுக்கங்களுக்கு மிகச் சிறந்த நாட்களாகும்" என்று திருவுளமானார்கள்.

இந்த ஹதீதை ஹஜ்ரத் அபூஹுரைரஹ் (ரலி) ரிவாயத்து செய்கிறார்கள்.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், துல் ஹஜ்ஜு மாதம் முதற் பத்து நாட்களில் ஒன்பது நாள் நோன்புடையவர்களாக இருந்து வணக்கத்தில் ஈடுபட்டிருப்பார்கள். ஒன்பதாவது நாளாகிய அர்பாவுடைய தினத்தில் நோன்பு நோற்பது ஸுன்னத்தாகும். அன்று செய்யும் புண்ணிய காரியங்களுக்கு ஒரு வருஷத்துப் பலன் (தவாபு) கிடைக்கும். ஒரு வருஷத்துப் பாபங்களும் மன்னிக்கப்படும்.

அல்லாஹு அக்பர்

ஹஜ்ஜு மாதம் 9-வது தினமாகிய அரபா தினத்தில், ஸுப்ஹு (காலைத்) தொழுகையி லிருந்து 13-ம் தினம் அஸ்ரு-மாலைத் தொழுகை வரை, ஒவ்வொரு பர்லான தொழுகைக்குப் பிறகும், (ஸலாம் கொடுத்தவுடன்) ஒரு முறையாவது தக்பீர் சொல்ல வேண்டும். அதாவது "அல்லாஹு அக்பர். அல்லாஹு அக்பர், லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், வலில்லாஹில் ஹம்து" என்று ஓத வேண்டும்.

இதை மூன்று முறை, இரைந்து ஓதுவது மிகவும் சிரேஷ்டம். ஜமாஅத்து தொழுகைக்குப் பிறகு, தொழுதோர் எல்லோரும் சேர்ந்து இவ்விதம் தக்பீர் ஓதுவது மிகச் சிரேஷ்டம். இந்தத் தக்பீர் வாக்கியங்களோடு இதர தஸ்பீஹ், தஹ்லீல் மொழிகளையும் சேர்த்து ஓதலாம்.

இங்ஙனம், ஒவ்வொரு தொழுகை நேரங்களின் பிறகும் தக்பீர் ஓதப்படும் நாட்கள் ஐந்தாகும். இந்த ஐந்து நாட்களையும் நாம் "அய்யாமுத் தஷ்ரீக்" என்று சொல்கிறோம். ஹஜ்ஜு மாதத்தில் தக்பீர் ஓதும் நாட்கள் என்றும் இதைக் கூறலாம்.

ஈதுத் தொழுகை

ஹஜ்ஜுக்காக திருமக்கா சென்று, மகாப் புனிதமான வணக்கங்களில் பங்கெடுத்துக் கொள்ளும் புண்ணியவான்களுக்கு, அய்யாமுத் தஷ்ரீக் நாட்கள் ஐந்தும் மகா விசேஷமானதாகும். அங்ஙனம் ஹஜ்ஜுக்காக புனித யாத்திரை போக பாக்யம் பெறாதபேதை முஸ்லிம்கள், துல்ஹஜ்ஜு மாதம் 10-ம் நாள் விசேஷமாய் தொழுதுக் கொள்ளும்

இரண்டு ரக்கஅத் (வாஜிபான-ஸுன்னத்தான) ஈதுத் தொழுகையிலேயே புனித ஹஜ்ஜுடைய புண்ணியத்தைப் பெற்றுக் கொண்ட சிலர்களாகிறார்கள்.

ஈதுல் அல்ஹாவாகிய ஹஜ்ஜுப் பெருநாளின் போது, அதிகாலையில் குளித்து முழுகிப் பரிசுத்தமாக வேண்டும். புது உடை பூண்டு நறுமணம் பூசி, தக்பீர் சொல்லிக் கொண்டு, தொழுகிற பொது இடத்துக்கு (ஈது காஹ்வுக்கு)ப் போக வேண்டும். சூரியச் சுடரில் சூடேறுத முன்னர், காலை 8-9 மணிக்குள், ஈதுத் தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவது மிகவும் நல்லது.

ஈதுத் தொழுகைக்காக பாங்கு-இகாமத்து சொல்லப்படமாட்டாது. எல்லா ஜனங்களும் எழுந்து வரிசைகளை திருத்தி நின்று, தொழுகையை இமாமுடன் நிறைவேற்ற வேண்டியது தான்.

ஈதுத் தொழுகையில், சாதாரணமாய் சொல்லப்படும் தக்பீர்களல்லாது, ஆறு தக்பீர்கள் விசேஷமாகவும் அதிகமாகவும் சொல்ல வேண்டும். அதாவது தொழுகை ஆரம்பத்தின் தக்பீர் தஹ்ரீமாவுடன். தனு (வஜ்ஜஹ்து) ஓதியதும் நிதானமாய் மூன்று முறை தக்பீர் சொல்லி, கைகளை உயர்த்த வேண்டும். இறுதியில் கை கட்டிக் கொண்டு ஓத வேண்டிய ஸூராக்களை ஓதித் தொழ வேண்டும். இரண்டாவது ரக்கஅத்தில் ஸூராக்களை ஓதியபின் ருகூவுக்குப் போவதற்கு முன் நிலையில், மற்றும் மூன்று முறை விசேஷ தக்பீர்கள் சொல்லி கை உயர்த்த வேண்டும்; இறுதியில் தக்பீர் சொல்லி ருகூவுக்குப் போய் தொழுகையைப் பூர்த்திப் படுத்த வேண்டும்.

தொழுகை முடிந்த பின், இமாமாகிய கதீபு சாஹிப், குத்பா ஓதுவார். அதை யாவரும் செவி தாழ்த்திக் கேட்க வேண்டும்.

தொழுகைக்குப் பிறகு குர்பானி

ஈதுகாஹுக்குப் போய் இரண்டு ரக்கஅத்தை தொழுது வந்ததும், ஹஜ்ஜு மாதக் கடமை தீர்ந்து விட்டதாக வெகு பேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தொழுகைக்குப் பிறகு தான்மனிதருக்கு மனிதர் செய்ய வேண்டிய மகத்தான கடமைகள் இருக்கின்றன.

அவற்றில் முதன்மையானது குர்பானி கொடுப்பதாகும். குர்பானி ஏழைகளால் கொடுக்கப்படுவதில்லை. ஜக்காத் கொடுக்க கடமைப்பட்டோரே குர்பானியின் பெயரால் (ஆடு, மாடு போன்ற) உணவுக்குரிய உயிர்ப்பிராணியை, ஆண்டவன் பெயரால் அறுத்து அதன் மாமிசங்களைப் பங்கிட்டு, ஏழை எளியோருக்கும் பந்துமித்திரர்கட்டும் கொடுப்பார்கள்.

இதனால் அந்தப் பிரமுகர், தன்னைப் போல் பிற முஸ்லிம்களும் அன்று நல்ல ஆகாரம் உண்டு சந்தோஷமாக வாழ்ந்திருக்க வழி செய்கின்றார். குர்பானியின் பெயரால் பரோபகாரம் புரியப்படுவது தான் ஈது நாளில் அனுஷ்டிக்கப்படும் மாபெரும் காரியம்.

குர்பானியின் பெயரால் பலியிடப்படும் உயிர்ப் பிராணியின் இரத்தமோ மாமிசமோ எலும்போ தோலோ, இறைவன் திருச் சன்னிதானம் போய்ச் சேருவதில்லை. ஆனால் குர்பானி செய்யும் முஸ்லிமுடைய உள்ளத்தில் நிலைத்திலங்கும் பக்தி விசுவாசமும் வணக்கப் பண்பும் நேர்மை யுணர்வும் தான், இறைவனிடம் போய்ச் சேருகின்றன. இதற்குப் பதிலாய், பக்தர்கள், அல்லாஹ்வின் பேரருளைப் பெற்று, முக்தியையும் விசிராந்தியையும் பேரானந்தத்தையும் பெற்றுய்கிறார்கள். அல்ஹம்து லில்லாஹ்.

புதிய இரண்டாம்பதிப்பு

நபிநாயகத்தின் ஜீவிய சரித்திரம்.

(சீருவசனம்)

இச்சரிதை நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவதரித்தது முதல், வபாதத்து வரையில் நிகழ்ந்துள்ள விஷயங்கள் யாவும் ஒன்றுசேர்த்து அச்சிடப்பட்டது. இது டிம்மி 1-8 பேஜ் ஸைஸில் 1008-பக்கங்களில் பதிப்பித்து இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூ. 8

ஷை அறபுத் தமிழ் அஷ்ஷஜாதுல் முஹம்மதியா (ரஸூலுல்லாஹ்வின் சரிதை.) இதன் விலை ரூ. 8

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

கீமியாயெ ஸஆதத்து.

தமிழ் பொழிப்புரை.

1—வது வால்யம்.

(புதிய பதிப்பு வெளிவந்து விட்டது.)

இது நாயகம் இமாமுல் கிராம் ஹுஜ்ஜதுல் இஸ்லாம் அபூஹாமிது முஹம்மது கஸ்ஸாலி றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களால் இயற்றப்பட்டதும் அரிய ஞான இரகசியங்கள் அடங்கியதுமான ஓர் பெரிய நூல். இந்நூலாகிறது மிகவும் கீர்த்தி பெற்று ஞானப் புதையலென்றும், விவேகப் பொக்கிஷமென்றும் விளங்கி வரும் “இஹ்யா உலூமுத்தீ”னென்னும் கிதாபில் நின்றும் கடைந்தெடுத்த கைவல்லியமாகும். இது உர்தூ பாஷையில் கீமியாயே ஸஆதத்து என்னும் நாமம் பெற்று அருமையாய் விளங்கி வந்தது. இதனை அறபீ, பார்ஸி, உர்தூ, தமிழ் பாஷைகளில் தேர்ந்த ஆலிமாய் விளங்கிய செல்லிக்குப்பம் கனம் அல் ஆலிமுல் பாஸில் மவுலானா மௌலவீ அப்துல் றஹ்மான் ஸாஹிபு அவர்களால் தமிழில் இலேசான நடையில் வசன ரூபமாய் இயற்றப்பட்டது. இந்த கிதாபின் சில விஷயங்களாவன:—

1-வது, தன்னையும் தனக்கு ஆதாரமான தலைவனையும் அறியாமல் பின்னையொன்றை தானென்றும் தலைவனென்றும் கருதுகிற பேர்களுக்கு இக்கிதாபு உணர்வை வர்வைக்கும்.

கலிகோ பைண்டு விலை ரூ. 3

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

187033

ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா

அவர்களின் சரித்திரச் சுருக்கம்.

(அய்யம்பேட்டை, S. அப்துர் ரஜாக் ஸாஹிப்.)

(6—வது பகுதி)

'ஹரீகால்' விவாகம்: மாமாஜிக்னிக்கு அழைப்பு

பட்டம் சூட்டிய இளவரசனுக்கு இனி விவாகஞ் செய்தல் அத்தியாவசியமா யிருந்தது. எனவே, இச்சந்தர்ப்பத்தை யடுத்து இராணி தம் மைந்தன் ஹரீகாலை கூப்பிட்டு அவனுக்கு பின் வருமாறு உபதேசித்தார் :—

தம்பி! உனக்கு உடன் பிறந்த சகோதரி ஒருத்தி உண்டு. அவள் ஹஸ்ரத் நத்ஹர் வலி என வழங்கும் மஹானிடத்தில் பரிபாலிக்கப் பட்டு வருகிருள். நீ அந்த மஹானிடத்திற்குப் போய் அவளை இந்த விவாகச் சடங்குகளில் கலந்து கொள்வதற்கென அனுப்புமாறு அவரை வேண்டிக் கொள். என் மனமும் அவளைப் பார்க்க துடித்துக் கொண் டிருக்கிறது.

மாமா ஜிக்னிக்கு ஹஸ்ரத் அவர்களை விட்டுப் போக பிரிய மில்லா திருந்தது. ஆயினும் அவர், ஹஸ்ரத் உத்தரவிற் கிணங்க தம் சகோ தரனுடஞ் சென்று தன் தம்பியின் விவாகச் சடங்குகளில் கலந்து கொண்டார்.

விவாகம் முடிந்ததும் 'மாமாஜிக்னி' திரும்பி வரும்போது அவரது தாயார், தம் புதல்விக்கு (மாமாஜிக்னிக்கு) ஏராளமான திரவியத்தை கொடுக்க வந்தார்; ஆயினும் அவற்றை அவர் எடுத்துக் கொள்ளவில்லை.

ஆனல், ஒரே யொரு கிளிக் கூண்டை மாத்திரம் அதன் கிளி உள்பட எடுத்து வந்தார்.

அக்கூண்டில் நவரத்தினங்கள் இழைக்கப் பட்டிருந்தன. அதில் உள்ள கிளி, ஹஸ்ரத் அவர்களிடம் வளர்க்கப்பட்டு வந்தது. ஒரு நாள் அக்கிளி ஹஸ்ரத் அவர்களின் புனித உதடுகளை தன் அலகின் கீழுள்ள நாக்கினல் முத்த மிட்டது. ஹஸ்ரத் ஒளலியாவின் மகிமையை கொண்டு அன்று முதல் அக்கிளிக்கு திருக் குர்ஆன் மனப்பாடமாய் விட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் நத்ஹர் வலியின் சகோதரர் கடிதம்.

ஹஸ்ரத் அவர்களின் சகோதரர் சையத்ஜலால் நீண்டகாலத்திற்குப் பின் தம் சகோதரரை நினைத்து ஆள் மூலமாய் கடிதம் எழுதி யனுப்பினர். அதில் அவர் தம் தமயனாரைக் காண எவ்வளவு ஆவல் கொண்டிருந்தார் என்ற சமாச்சாரம் மனதை உருக்கக் கூடியதாக விருந்தது. தமக்கு ஒரு புதல்வியும் இரண்டு புதல்வர்களும் இருந்து வருவதாக அவர் அதில் குறிப்பிட்டு, தீவிர பதில் எழுதி யனுப்புமாறு கோரினர்.

ஹஸ்ரத் நத்ஹர்வலியின் பதில்

ஹஸ்ரத் அவர்கள், எழுதிய பதிலின் சுருக்கம் யாதெனில்:—

என் மனமும் உம்மைப் பார்க்க பன் மடங்கு அதிகம் துடித்து கொண்டிருக்கிறது. ஹஸ்ரத் யாகூப் (அலை) அவர்கள், ஹஸ்ரத் யூஸுப் (அலை) அவர்களைக் காணக் கொண்டிருந்த ஆவலைப் போலவே இங்கு நினைக்க வேண்டி யிருக்கிறது.

நான் இலங்கைக்குப் போய் அங்கிருந்து நேரே ரூமுக்கு வர எண்ணி யிருந்தேன். ஆனல் ஹஸ்ரத் ஆதம் (அலை) உடனே என்னை இங்கு புறப்பட்டுச் செல்லுமாறு உத்தர விட்டதனல் நான் அங்கு வர முடியவில்லை. இப்போது இக்கடிதத்தை கொண்டு வரும் ஷாஅப்துர் ரஹ்மான் சித்தீகி பெயர் கொண்டவர் என் முரீது ஆவர். நீர் இவருடன் உம்முடைய புதல்வியை மணஞ் செய்து விடும்.

ஷாஅப்துர் ரஹமான் 50 கலந்தர் பகீர்களோடு அக்கடிதத்தைக் கொண்டு ரூம் தேசத்திற்கு பயணமானர்.

ஹஸ்ரத் அவர்களின் கராமத் ஓர் அன்னிய முரீதின் பெயரைச் சொல்லல்.

ஷாபக்ருத்தீன் என்பவர் "சிஸ்தான்" நாட்டின் அரசகுமாரர். தந்தைக்குப்பின் இவர் பட்டத்திற்கு வரவேண்டியவர். ஆனல் இவர் தம்பி சையத் முர்துஜாவை சிம்மாசனத்திலமர்த்தி, மக்காவுக்கு போய் ஹஜ்ஜு செய்து, மதீன ஷரீபுக்குப் போனர்.

யாதொருதக்க ஷய்க் இடத்தில் முரீது வாங்க வேண்டும் என்ற ஆவலுடன் அவர் நபி பெருமானவர்களின் அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் அவருக்கு சொர்ப்பனத்தில் நபி பெருமானவர்களின் உத்தரவு கிடைத்தது.

அதாவது: "நீர் நேரே தென்னட்டிற்குச் செல்லும். அங்கே யாதொரு அன்னியர் உம்முடைய தகப்பனர் பெயருடன் உம்முடைய

பெயரைச் சொல்லியும் அழைப்பார். அவரே, உம்மை உம்முடைய ஷய்க் இடத்திற்கு கொண்டு போவார்'' என்பது. அதன்படியே ஷாபக் ருத்தீன் ஓர் குறித்த காலத்தில் தென்னாட்டை யடைந்தார்.

அவர் எந்த நேரத்தில் எவ்வழியே வரப்போகிறார் என்ற இரகசியத்தை யறிந்த ஹஸரத் நத்ஹர்வலி அவர்கள் மாமாஜிக்னியின் தலைமையில் சில கலந்தர்களை கூட்டி வருபவரை அழைத்து வர அனுப்பி வைத்தார்கள்.

அப்போது இருந்தாற் போலிருந்து அங்கே புதிய பகீர் ஒருவர் மிக்க அலங்கோலமான தசையில் போவதாகத் தென்பட்டார்.

மாமாஜிக்னி, உடனே, அவரை நோக்கி, "ஓ சையத் ஹுசைன் குமாரரான, பக்ருத்தீனே! நீர் 'ஷய்க்' அவர்களைத் தேட வந்திருந்தால் என்னிடம் வாரும்" என்று உரத்திச் சொல்லவே, பக்ருத்தீன் அதைக் கேட்டு புத்துயிர் அடைந்தார்.

ஆனால் ஒரு பெண் அல்லவா தம்மை அழைக்கிறது என்ற சந்தேகம் அச்சமயம் அவருக்கு ஏற்பட்டது. பின்னர். மாமாஜிக்னியானவர், "என்னை ஷய்க் அனுப்பி யிருக்கிறார். என்னுடன் வாரும். நான் அழைத்துச் செல்லுகிறேன்" என்றபோது அவருக்கு அளவிலா சந்தோஷ மேற்பட்டது.

அப்பால் அவர் ஹஸ்ரத் அவர்களை முலாகாத் செய்து அவர்கள் கட்டளைக்கிணங்க இலங்கை காட்டில் உள்ள "ஆஷகானிகுவான்" (மெய்ஞானிகளின் கிணறு)வில் குளித்து வருமாறு அனுப்பப்பட்டார்.

அச்சமயம் அவர் இடுப்பில், வார் ஒன்று இறுக்கமாய் கட்டப்பட்டது. அவ்வார் ஹஸரத் உத்திரவிற் கிணங்க மாமாஜிக்னி, தம் கையால் கட்டினார். அந்த வாரை திரும்பி வந்த பிறகே அவிழ்க்க வேண்டுமென கண்டித்துச் சொல்லப்பட்டது.

சையத் பக்ருத்தீன், ஷய்க் அவர்களின் அனுமதியைப் பெற்று இலங்கைக்குச் சென்றார். எவ்வளவோ இடையூறுகள் அவருக்கு பிரயாணத்தில் சம்பவித்தும் அவர் யாவற்றையும் பொருட்படுத்தாமல் முன்னேக்கிப் போனார்.

பாதையிலுள்ள காட்டுச் செடிகளினின்றும் தாமாக பழுத்து விழும்படியான கனிகளே எடுத்து புசிக்கிறார். அவருக்கு ஷய்க் உத்தரவும் அதுதான்.

கடைசியாக இலங்கையில் உள்ள அந்த ஆஷகானி கிணற்றை யடைவதற்குள் அவருக்கும் அநேக தியாகங்கள் செய்ய நேர்ந்தன. முதலாவதாக, ஓர் காட்டேரியுடன் அநேக நாட்கள் மல்யுத்தம் செய்த

பின், தம் ஷய்க் அவர்களை நினைத்து அக்காட்டேரியை தோற்கடித்தார். சுருங்கச் சொல்லில் அவர், கண்ட பல்வேறு அதிசயங்களைப்பற்றி விவரிக்க இங்கு இடமில்லை.

கடைசியாக, அக்கிணற்றை யடைந்தபோது அதன் வாயின் மீது பயங்கரமானதும் கூர்மையானதுமான வாட்கள் தாமாகவே சுற்றிக் கொண்டிருப்பதைக் கண்டார். ஆயினும் அந்த வாட்களுக்கும் சிறிதும் அஞ்சாமல் அவர் அதனுள் குதித்து செவ்வனே குளித்து மேலே ஏறி வந்தார். கிணற்றில் குளித்த மாத்திரம் அநேக, இரத்தினங்கள் அவரது சரீரத்தில் ஒட்டிக் கொண்டிருந்தன. அவைகளை யாவும் அவர் துடைத்தெறிந்தார்.

ஆனல், ஒரேயொரு இரத்தினம், அவர் இடுப்பின் வார்பட்டையில் சிக்கிப் போயிருந்த படியால் அவர் அதை கவனியாது வந்து விட்டார்.

பிரயாணத்தில், 12 வருஷங்கள் கழிந்தும் இடுப்பு வார் பிரிக்காததனல் அந்த இரத்தினம் அதில் இரகசியமாய் ஒட்டிருந்தது.

ஷாபக்ருத்தீன் தமது ஷய்க் அவர்களுக்கு எதிரில் வந்த போது ஷய்க் அவர்கள் முதலில் அவரது கொடிய பிரயாசைகளுக்காக அவரை புகழ்ந்தார்கள். அடுத்தாற் போல் "நீர் உலக பொருளாசையை இன்னமும் மீதி மிச்சமாக ஏன் வைத்திருக்கிறீர்?" என்று கேட்ட போது, ஷாபக்ருத்தீன் திடுக்கிட்டுப் போனர்.

உடனே அவர், "ஹஸ்ரத்! நானே உலகாசையை வெறுத்து வந்திருப்பவன், தாங்கள் இவ்வாறு சொல்வது எனக்கு விளங்கவில்லையே" என்றார்.

அப்போது, மாமாஜிக்னி ஹஸ்ரத் உத்தரவின் பேரில், பக்ருத்தீன் உடைய இடுப்பு வாரை அவிழ்த்தார். அதிலிருந்து இரத்தின மொன்று வெளியாயிற்று. பக்ருத்தீன், தன் அறியாமைக்கு வருந்தி மன்னிப்பு வேண்டினர். அந்த இரத்தினம் அந்த ஊர் அரசனிடத்திற்கு அனுப்பப்பட்டது. ஆனல் அரசன் அதனை மதிப்பிட பல வைர வியாபாரிகளுக்கு அனுப்பினன். ஆயினும் எந்த வியாபாரியும் அதன் விலையை மதிக்கமுடியாதவாறு அவ்வைரம் அவ்வளவு உயரியதா யிருந்தது.

இது இப்படி யிருக்க, ஹஸ்ரத் நத்ஹர் வலி, ஷா பக்ருத்தீனுக்கு முரீது கொடுத்து அத்துடன் அவருக்கு கிலாபத் பதவியும் அளித்தார்கள்.

இனி, பக்ருத்தீன் என்பவர் எங்கு போய் தங்க வேண்டும் என்பதற்கு, ஹஸ்ரத் நத்ஹர் வலி, தம் மிஸ்வாக் (பல்துலக்கும் குச்சி) ஒன்றை பக்ருத்தீனுக்கு கொடுத்து, அவர் தம் பிரயாணத்தில், இரவு தங்கும் இடத்தில் அந்த மிஸ்வாக்கை பூமியில் நட்டு, தண்ணீர்

ஊற்றினால், அந்த மிஸ்வாக்கு துளிர் விட்டு முளைக்கும் படியான இடமே அவர் இருப்பிடம் என்று அடையாளம் கூறினார்கள்.

பக்ருத்தீனுடன் 200 பகீர்கள் பின் தொடர்ந்துச் சென்றார்கள். எங்கெந்த இடங்களில் இரவு தங்க நேரிட்டதோ அங்கெல்லாம் மிஸ்வாக், ஊன்றி வந்தார்கள். ஆனால் அது அங்கெல்லாம் முளைக்க வில்லை. அப்பால், "பில்குண்டா" (பேனு கொண்டா) ஊரை யடைந்ததும் அங்கே இரவு தங்க நேரிட்ட போது ஊன்றி யிருந்த மிஸ்வாக் முளைத்துக் கொண்டது. தூரதிர்ஷ்டவசமாய் அவ்வூர் அரசன், மிகக் கொடுங்கோலன், ஊரை விட்டும் இரண்டு மைல் தூரத்தில் அரசன் தேவாலயம் இருந்தது. பக்ருத்தீன் தம் கலந்தர்களோடு தேவாலயத்தின் முற்றத்தில் தங்கினார். அத்தகவல் அரசனுக்கு எட்டியது. உடனே இவர்களை வெருட்ட ஆள் வந்தது.

பகீர்கள், அன்றிரவு மட்டுமே தங்களுக்கு தங்க இடந்தருமாறு வேண்டிக் கொண்டனர். மேலும் அவர்கள் அந்த இரவு அங்கேயே தங்கி விட்ட செய்தியைக் கேட்ட அரசன், விடியற் காலை அவர்களைச் சுற்றிலும், சிப்பாய்களைக் கொண்டு காவலாக வளைத்துக் கொண்டான். அவர்களுக்கு இந்த நிலைமையில், சாப்பாட்டுக்கு கஷ்டமாய் விட்டது.

இப்படி இருந்து வரும் போது, அங்கு காளை மாடொன்று, மேய்ந்த வண்ணமாக வந்தது. பசியால் வாடி கிடந்த கலந்தர்கள் அதை பிடித்து ஸப்ஹு செய்து சமைத்த பின் புசித்து விட்டார்கள்.

காளையின் தலை, கால்கள், தோல் இம்மூன்றையும் கொண்டு போய் தங்கள் ஷய்க் பக்ருத்தீன் அவர்களுக்கு முன் வைத்து விஷயத்தை விவரித்தார்கள். கோயிலைச் சேர்ந்த காளைக்கு இவ்வாறு உயிர்ச் சேதமேற்பட்ட தகவல் அரசனுக்கு கிடைக்கவே, அவனுக்கேற்பட்ட ஆத்திரம் இவ்வளவு அவ்வளவல்ல. உடனே அரசன் பக்ருத்தீன் அவர்களிடம் வந்து அதைப்பற்றி விசாரித்த போது அவர்கள் அரசனுக்கு நிம்மதியளித்து, தம் அருகில் இருந்த காளையின் அவயவங்களை யாவும் திரட்டி "காளையே எழுந்திரு" என்று ஏவலிட்டதும், காளை எழுந்திருந்து மேய ஆரம்பித்தது.

அரசன், அதைக் கண்டு பிரமித்தான். பகிரங்கத்தில் அவன் மன்னிப்புக் கோரின போதிலும் அந்தரங்கத்தில், அவர்களைக் கொல்ல எத்தனித்து, வீட்டுக்குப் போனதும் விஷம் கலந்த பலகாரங்களை தயாரித்து அவற்றை வாயகன்ற பாத்திரத்தில் வைத்து, ஹஸ்ரத் பக்ருத்தீன் சமூகத்திற்கு காணிக்கையாக கொடுத்தனுப்பினான்.

தமக்கெதிரில் வந்துள்ள பலகாரங்களைக் கண்டதும் ஹஸ்ரத் அவர்களுக்கு அவற்றின் இரகசியம் புலனாகி விட்டது. அப்படி யிருந்

தும் ஹஸ்ரத் அவர்கள் 5 பலகாரங்களை எடுத்து கலந்தர்களுக்கு தின்னக் கொடுத்தார்கள். அவர்கள் அவைகளை புசித்தும் யாதொரு தீங்கும் நேரிடவில்லை.

ஆனால், புசித்தவர்களுக்கு பதிலாக அவற்றை அனுப்பிய அரசனுக்கே சகிக்கொண்ணாத வயிற்றுவலி உண்டாயிற்று. என்னென்னமோ பரிகாரங்கள் செய்தும் வலி நின்றபாடில்லை. அதன் பேரில் அரசன் தன் மனைவியை ஹஸ்ரத் அவர்களிடத்திற்கு அனுப்பி தன் பெரும் குற்றத்தை மன்னிக்கவும், தன் வயிற்றுவலி நின்று விடுமாறு துவாச் செய்யவும் வேண்டிக் கொண்டான்.

இராணி அவ்வாறே வந்து முறையிட்ட போது, ஹஸ்ரத் விசேஷ புன்னகைப்புடன் அவ்வரசன் அனுப்பி யிருந்த பலகாரங்களில் ஒன்றை யெடுத்து, இராணி கையில் கொடுத்து, அதை அரசனுக்கு மருந்தாகக் கொடுக்கும்படி கட்டளை யிட்டார்கள்.

இராணி கைபடவே, அப்பலகாரத்தை வரப்பெற்ற அரசன், முதலில் பயந்து விட்ட போதிலும், ஷய்க் மஹானவர்கள் விசுவாசத்தை யனுசரித்து வாங்கினதும் தின்று விட்டான். உடனே அவன் வலி நின்றது. அதே சமயம் அவன், தான் வணங்கி வந்த தேவாலயத்தையும் மூடிவிட்டான்.

அரசன், வணங்கிவந்த சுவாமிப் பெயர் "ஜங்கம்." அது, அரசனிடம், ரோஷத்துடன் வந்து "நீ, கலந்தரை என்னைவிட மேலாக நினைத்துக் கொண்டாயே. சரி, என்னையும் அவரையும் ஏக காலத்தில் சோதித்துப் பார்" என்றது. அதாவது, ஜங்கம் யோசனைக் கேற்ப இரண்டு சுண்ணாம்பு மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. ஒன்றில் ஹஸ்ரத் பக்ருத்தீனையும், மற்றொன்றில் "ஜங்கம்" ஐயும் அடைத்துக் கட்டி நதியில் தள்ளி விட்டார்கள். ஜங்கம் மூட்டைக்குள் உயிர் நீத்தது. பகருத்தீன் மூன்றும் நாள் யாதொரு தீங்கில்லாமல் வெளியானார். உடனே கலந்தர்கள் மலை ஏறி பாங்கு சொல்லத் தொடங்கினர்.

சையத் பக்ருத்தீன் பின்னர், "பில்குண்டா" விலேயே தங்கி, அங்கேயே காலமானார்கள். அவர்களின் திரு சமாதியும் அங்குதான் நிலை கொண்டிருக்கிறது.

எந்தவிடத்தில் அவர்கள் 'மிஸ்வாக்' முளைத்து வந்ததோ அதே முளையானது இன்றைக்கு பெரியதோர் விருக்ஷமாக வளர்ந்திருக்கிறது.

ஹஸ்ரத் நத்ஹர்வலி வாழ்க்கையின் கடைசி கால நிகழ்ச்சிகள்.

ஹஸ்ரத் அவர்கள் திருச்சியை யடைந்த பின்னர் அங்குள்ள பூத கணங்களை யாவும் அழித்து இஸ்லாத்தை பரவச் செய்தார்கள். பள்ளி

வாசல்கள், ஆங்காங்கே கட்டப்பட்டு அவைகளில் தொழுகைகள் ஒழுங்கான முறையில் நடைபெறவாயின.

கலந்தரியா தரீகாவில் ஹஸ்ரத் நத்ஹர்வலி 27 வருஷ காலம் கழித்தார்கள். றஸூலுல்லா (ஸல்) அவர்களின் ஹிஜ்ரி ஆண்டுகள் 417-க்கு எட்டி யிருந்த வருஷமே இவர்கள் வபாத்து வருஷ மெனச் சொல்லப்பட்டிருக்கிறது. ரம்லான் மாதம் பிறை 14 திங்கட் கிழமை தினம் காலமானார்கள்.

ஹஸ்ரத் காதிர்வலி, ஹஸ்ரத் நத்ஹர்வலி அவர்களை சந்தித்துப் பேசுதல்.

ஹஸ்ரத் காதிர் வலி அவர்கள், ஜீவித்திருந்த காலத்திற் கிடையில் தம்முடைய சில முரீதுகளை ஹஸ்ரத் நத்ஹர் வலியின் தர்காவுக்கு அழைத்து வந்தார்கள்.

அவர்கள் வந்து ஹஸ்ரத் நத்ஹர் வலி சமாதி அறையின் கதவண்டை நின்றதும், அதில் போடப் பட்டிருந்த பூட்டு தானாக திறந்து கொண்டதுடன் கதவுகளும் திறந்து கொண்டன.

ஹஸ்ரத் காதிர்வலி அவர்கள், தம்முடன் வந்த முரீதுகளை வெளியில் விட்டு வைத்து தனியே உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் உள்ளே போனவுடன் கதவு தானாகவே மூடிக்கொண்டது.

இரு ஔலியாக்களுக்கிடை; மூன்று நாள் வரையில் தொடர்ந்தாற் போல் சம்பாஷணை நடந்து வந்ததாயும் அச்சம்பாஷணை இன்னதென்று சரிவர விளங்கவில்லை யாயினும் இருவர் பேசும் சப்தம் மாத்திரம் முரீதுகளுக்கும் ஏனையர்களுக்கும் செவியுறப்பட்டு வந்ததாயும் சொல்லப் பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியாசரிதை முற்றிற்று.

18033

Edited by M. S. Abdul Khudus.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

மிப்தாஹுஸ்ஸலாஹ்
பீ யிலாஹின்னிகாஹ்.

(இப்புத்தகம் இல்லற வாசிகள் ஒவ்வோருவருக்கும் அவசியம் வேண்டியது.)

இதில் நிக்காஹுடைய வரிசைகளும், அஹ்காம்களும் ஸ்திரி புருஷருடைய குணலக்ஷணங்களும், ஒவ்வொருவரும் இன்ன குணமுடையவர்க ளென்று பார்த்தமாத்திரத்தில் கண்டறியக் கூடிய வழியும், ஸ்திரி புருஷர்கள் அவசியம் அறியவேண்டிய அநேக ரகசியங்களும், ஒரு புருஷன் விரும்பிய மனைவியையும், ஒரு ஸ்திரி விரும்பிய கணவனையும் அடைவதற்கு வேண்டிய இஸ்முகளும் அடங்கியிருக்கின்றன.

இவை யன்றி ஸ்திரி புருஷருக் கிடையில் முஹப்பத் உண்டாவதற்கும் ஹமல் உண்டாவதற்கும், ஹமலைக் காப்பதற்கும் அவசியமான இஸ்மு களும் ஹமலில் உண்டாகக்கூடிய பலவகை வியாதிகளுக்கு அரிய ஔஷதங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

முன்பதிப்பிலிருந்ததைவிட இப்பதிப்பில் அநேக அரிய விஷயங்களும் இஸ்முகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வாசிப்போர்க்கே இந்நூலின் அருமை விளங்கும்.

புதிய பதிப்பு கிளேஸ் காகிதம் கலிகோபைண்டு

விலை ரூ. 3

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

கஸஸூல் அன்பியா.

இதில் முதலாவது அல்லாஹுதஆலா ஆதியாய்படைத்த படைப்புகளைப் பற்றியும், 1-வது பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம், 2-வது ஷீது அலைஹிஸ்ஸலாம், 3-வது இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம், 4-வது ஹாரூத் மாரூத் தென்னும் இரண்டு மலக்குகள், 5-வது நூஹு அலைஹிஸ்ஸலாம், 6-வது ஹூது அலைஹிஸ்ஸலாம், 7-வது ஷத்தாது கட்டின இரமதாத்துல் இமாதென்கிற சுவர்க்கம், 8-வது ஸாலிஹு அலைஹிஸ்ஸலாம், 9-வது இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம், 10-வது இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம், 11-வது இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம், 12-வது யாஃகூபு அலைஹிஸ்ஸலாம், 13-வது யூஸூப் அலைஹிஸ்ஸலாம், 14-வது ஐயூபு அலைஹிஸ்ஸலாம், 15-வது ஸில்கிப்லி அலைஹிஸ்ஸலாம், 16-வது ஷூஐபு அலைஹிஸ்ஸலாம், 17-வது மூஸா அலைஹிஸ்ஸலாம், 18-வது கிலுறு அலைஹிஸ்ஸலாம் 19-வது இல்யாஸ் அலைஹிஸ்ஸலாம், 20-வது அல்யஸஉ அலைஹிஸ்ஸாம், 21-வது அஷ்மவீல் அலைஹிஸ்ஸலாம், 22-வது தாவூத் அலைஹிஸ்ஸலாம், 23-வது ஸூலைமான் அலைஹிஸ்ஸலாம், 24-வது யூனுசு அலைஹிஸ்ஸலாம், 25-வது ஈஸா அலைஹிஸ்ஸலாம் 26-வது ஜக்கரியா அலைஹிஸ்ஸலாம், 27-வது யஹ்யா அலைஹிஸ்ஸலாம், 28-வது பீவி மரியம் அலைஹிஸ்ஸலாம் ஆக இவ்வளவு நபிமார்களுடைய கிஸ்ஸாக்களடங்கி யிருக்கின்றன. இந்தக் கிஸ்ஸாக்கள் யாவும் குர்ஆனில் பிரஸ்தாபிக்கப்பட்டவைகளாகும். இதை ஒவ்வொரு முஸ்லிமும் வாங்கிப் படிக்க வேண்டியது அவசியம். இது திறமையான காகிதத்தில் சுத்தமாய் அச்சிடப்பட்டிருக்கிறது.

கலிகோ பைண்டு விலை ரூ. 9—8—0

ஷை அறபுத் தமிழ் ரவ்லதுல் அஸ்பியா-பீ-கஸஸூல் அன்பியா முதற்பாகம் றப்பு கலிகோ பைண்டு விலை ரூ. 6

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹூல் ஹமீது & ஸன்ஸ்

ஷாஹூல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.